தென்மொழி

இன்றுதான் - அதுவும் - ஒன்றுதான் !

இன்றுதான் - அதுவும் - ஒன்றுதான் — மிக
நன்றுதான் -- தமிழ்
இனமுன்னேற்றம் இனமுன்னேற்றம்
என்றே அனைவரும் கொண்டே உழைப்பது!
(இன்றுதான்)

வென்றுதான் தீரவேண்டும் தமிழினம்!
வெல்லாது போனாலோ அனைத்தும் அழிவுறும்!
(இன்றுதான்)

தொன்றுதொட்டுதான் வந்ததே தமிழ்மொழி!
தொலைந்ததே அதுவெனில் வருமே பெரும்பழி!
(இன்றுதான்)

அன்றுதொட்டுதான் இருந்ததே தமிழினம்!
அனைவரும் பேணிட விலையெனில் அழிவுறும்!
(இன்றுதான்)

தின்றுதெவிட்டுவதொன்றே வாழ்வெனத்
தீர நினைப்பது நன்றோ? தாழ்வு அது!
(இன்றுதான்)

குன்றும் குலையுமே காத்திட விலையெனில்!
கோடி கொடுப்பினும் நன்று அது நிலைபெறல்!
(இன்றுதான்)

என்றும் அழிவதே இவ்வுடற் பிறப்புதான்!
இனநலம் பேணிட அழிவதோ சிறப்புதான்!
(இன்றுதான்)

சுவடி : 19
ஓலை : 10-11

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உரூபா 1-25

நமக்கு வந்த மடல்கள்.

0: 975 : அன்புமிகு பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம். தென்மொழி சுவடி 19-ஓலை 5-இல் அதிர்ச்சிதரும் செய்தியாகவே இருந்தது ஆசிரிய உரையில். 'பள்ளமெனப் போனாலும் பண்புக்குன்றானாலும் உள்ளமொன்றாய்க் காணும் உரமுடையோய்! —உள்ளம் கலங்குவது மேனோ? கடமைதனைச் செய்யப்பலங்குறைவதன்றோ பணி'?

தாங்கள் ஆற்றிவரும் தென்மொழித் தொண்டு பயன் தரவில்லையே என்ற உள்ளத் துடிப்பை உணர்கின்றேன். உயிரோட்டமுடைய தங்கள் காரசாரப் பாடல்களும், அறிவு ஆக்க உரை நடைகளும் அறிவாளிகளால், இடையில் அணைகளாகத் தேக்கிப் பாய்ச்சப்பெறும் வயல்கள் உடைக்குமளவுக்குத் தாங்கள் உழைத்துத்தான் ஆகவேண்டும். அதன்பின் தடுத்தாலும் அவ் வரப்போரங்களில் புற்களாகவும், கற்களாகவும் விழுந்துகிடக்கும் அவ்வேழை எளிய மக்களுக்குப் போய் உதவும் என்பதுதான் உறுதியான நம்பிக்கை. அதுவன்றித் தென்மொழிக்கு முடிவிழாவும், தமிழ்ச்சிட்டு பறப்பதை நிறுத்திவிடவும் செய்துவிட்டால் உ. த. மு. க. எவ்வாறு உன்னிப்பாய் வளர்ந்து ஒளிறும்? தங்களுடன் துணை நிற்க அணியமாயிருக்கிறேன். தென்மொழியால் உயர்வடைந்த -- பயன்பெற்ற நல்லோர்கள் ஒருங்கு திரண்டு உறுதுணையாய் நின்று கிழிறங்கி வந்து தோள் கொடுத்துதவித் துணைநிற்பர். இவை செய்யாவிடின் இவர்கள் கற்றதனாற் பெற்றபயன் என்ன? தங்கள் உள்ளம் ஆறுதல் பெறுக! அன்பன்,

— **இ. முத்துச்சாமி** தெய்வநாயகப்பேரி அஞ்சல்

0: 976 : வணக்கத்திற்குரிய பாவலரேறு ஐயா அவர்களுக்கு, இதுகாறும் தங்களின் மனக்குமுறல்களையே தொடர்ந்தெழுதி வருகின்றீர்கள். மூன்று இதழ்களாகத் தென்மொழி ஆசிரிய உரை, ஆக்கமும் ஊக்கமும் தருவதாக அமையாமல் தங்களின் மனச்சோர்வினையே பறைசாற்றிக் கொண்டிருக்கிறது! இது இப்போது தேவைதானா என்பதை ஐயா சற்று ஆழ்ந்து எண்ணிப்பார்த்திட வேண்டும். முதல் உரையிலேயே தங்களின் உணர்வினைப் புரிந்து கொண்ட தமிழ் நெஞ்சங்கள் தாம் நாங்கள்!

இனி, நாங்கள் என்னென்ன செய்திட வேண்டும்; செய்தால் தங்கள் தூய தொண்டினைத் தொடர்ந்திட இயலும் என்பனவற்றை விளக்கித் தொடர்ந்து ஆசிரிய உரையில் எழுதுவதுதான் உடனடியாகப் பயனளிக்கக்கூடும். ஆங்காங்கே சிதறிக்கிடக்கும் தூய தமிழுள்ளங்களைத் தொட்டிழுக்கும் வண்ணம் தங்களின் உரை அமைந்திடல் தேவை. தங்களை விட்டால் தமிழ்நலங் காத்திட- இனங்காத்திட எவருமிலர் என்றிருக்கும் இக்காலக் கட்டத்தில்; தங்களைத் தமிழ்கூறு நல்லுலகம் மிகவும் அதிகமாகவே எதிர்நோக்கி நிற்கிறது என்பதனை மறவாதீர்கள்! மீண்டும் வணங்கி மகிழ்கிறேன். இன்னனம், தங்களின் தமிழ்த் தொண்டன்.

— **மு. சொக்கப்பன்**, திருப்பராய்த்துறை.

Scanned with CamScanner

'தென்மொழி'-மொழி, இனத்திற்கு ஆற்றியுள்ள பணி பெரிது!

மிகவும் வருந்துகிறோம்;

மறுஆய்வு செய்யக் கேட்டுக் கொள்கிறோம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளாரின் அன்பு மடல்!

தவத்திரு.
குன்றக்குடி அடிகளார்

குன்றக்குடி-623206.
இராமநாதபுரம் மாவட்டம்.
தொலைபேசி: காரைக்குடி-215
நாள் : 20-5-83

அன்பிற் சிறந்த நமது திருமிகு. பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு எல்லா நன்மைகளும் பெருக அண்ணாமலை அண்ணலின் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

'தென்மொழி' இதழைத் தாங்கள் நிறுத்திவிடப் போவதாகக் கேள்விப்பட்டு மிகவும் வருந்துகின்றோம். 'தென்மொழி' இதழ், சென்ற காலத்தில் தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும் ஆற்றியுள்ள பணி பெரிது. நம் தமிழ்நாட்டில் நல்ல இதழ்கள் வெளியிடுவதில் மிகுந்த இடர்ப்பாடுண்டு என்பது நாம் அறிந்ததே. எனினும் ஏற்பட்டுள்ள இடர்ப்பாடுகளை நீக்கித் தொடர்ந்து 'தென்மொழி'யை வெளியிட இயலுமா என்பது குறித்து மறு ஆய்வு செய்யும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

தங்களுடைய ஆற்றல் மிக்க பணி வளரவும் அவ்வழி தமிழும் தமிழினமும் வாழ்வு பெறவும் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

மற்றவை தாங்கள் கடிதம் கண்டு

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

— **அடிகளார்**

பாவலரேறுவின் 4-ஆவது அயலகச்செலவு!

செப்டம்பரில் இங்கிலாந்து, பிரான்சு செல்கிறார்!

பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் வரும் செப்டம்பர் மாதத் தொடக்கத்தில் இங்கிலாந்தில் நடைபெறும் திரு.வி.க. நூற்றாண்டு விழாவிலும், பிரான்சில் நடைபெறும் உ.த.மு.க. தொடக்க விழாவிலும், பெரியார் பெருவிழாவிலும் கலந்து கொள்ளவிருக்கிறார் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

''கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டிலுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[திருவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனியப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : **பெருஞ்சித்திரனார்**

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன் (சிங்கை), தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி. ப. துரையரசன். தென்மொழி நா. இளமாறன்.

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப் பெறுவன.)

சுவடி: 19] உ௦கச ஆடவை (மே-சூன் 83' [ஓலை: 10-11

என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள்-4

'தென்மொழி'யைத் தொடங்க வேண்டும் என்ற எண்ணம் நான் புதுவையில் அஞ்சல் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்த பொழுதே—1956-57-இலேயே-என் உள்ளத்தில் தோன்றிவிட்டது. அப்பொழுதே அதைத் தொடங்க வேண்டாம் என்றும், தொடங்குவதால் ஒரு பயனும் விளையப்போவதில்லையென்றும், தொல்லைகள்தாம் மிஞ்சும் என்றும், வருவாய் ஒருசிறிதும் வராதென்றும், வாழ்க்கையில்

முன்னேற்றமே ஏற்படாதென்றும், பலவாறாகக் கூறித் தடுக்க முயன்றவர்கள் பலர். சிலர் எனக்கு ஓரிருவகையில் ஊக்கம் தந்தனரேனும், அவர்களால் அகப்புற வழியில் பெருந்துணையாக நிற்கமுடியாமல் போனது. சிலர் அதால் தங்களுக்கு ஏதேனும் பயன் விளையலாம் என்று கருதிச் சில நிலைகளில் துணை நிற்க முன் வந்தனர். நான் எவருடைய கருத்துக்கும் முற்றும் செவி சாய்க்காமல், செவி சாய்த்தாலும் முழுவதும் ஏற்றுக் கொள்ளாமல், என்னுடைய கருத்துடபடியே, அதைத் தொடங்கியே தீருவதென்று முடிவு கட்டிக்கொண்டு செயல்படத் தொடங்கினேன். எனவே தப்பித் தவறி என் கருத்துக்கு இசைவாகக் கருத்துத் தெரிவித்தவர்களையெல்லாம் முழுமையாக நம்ப வேண்டியிருந்தது.

புதுச்சேரியிலிருந்து கடலூர்க்குப் பணித் தொடர்பாக நான் மாற்றப்பட்டு விடுவேன் என்று எதிர்பார்த்ததால், இதழ்ப் பணியைக் கடலூர்ப் பகுதியிலேயே தொடங்கவேண்டியிருந்தது. அங்கேயே இதழ்ப்பதிவும் செய்யவேண்டியிருந்தது. அக்கால் எனக்குப் பெரிதும் துணையாயிருந்தவர், என் அன்புக்கும் முழுநம்பிக்கைக்குமுரியவராக இருந்தவரும், இன்றுவரை எனக்கு அவ்வப்பொழுது வந்து என் வகையிலும் குடும்ப வகையிலும் ஆன நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும் கெழுதகைமை உடையவரும் ஆகிய திரு. பன்னீர்ச் செல்வம் ('தமிழம்' ஆசிரியர் செம்பியன்) அவர்களே. அவரும் அஞ்சல் துறையில் பணியாற்றியதுமில்லாமல், எனக்கு முன்பாகவே கடலூர்க்கு மாற்றப்பட்டிருந்தார். எனவே அவர் துணையுடன் இதழைப் பதிவு செய்து, தென்மொழி அச்சீட்டை நெல்லிக்குப்பத்தில் 1959-இல் தொடங்கினேன்.

அது தொடங்கியபொழுதும், அதன் பின்னும் நாங்கள் பொருள் வகையிலும், வினைவகையிலும் பட்ட துயர்களுக்கு அளவே இல்லை. என் சம்பளம் முழுவதும் தென்மொழியில் ஈடுபடுத்தினேன். ஏறத்தாழ பதினைந்து ஆண்டு அஞ்சல் துறைப் பணியில் நான் பெற்று வந்த சம்பளம் எவ்வளவு என்பது என் துணைவிக்கு அன்றும் தெரியாது; இன்றும் தெரியாது. சம்பளத் தொகையில் தென்மொழிக்குப் போன எச்சந்தான் வீட்டுச் செலவுக்குப் போகும். அதுவும் அன்றாடத் தேவைகளுக்குரிய பொருள்களைத்தாம் ஒவ்வொருநாளும் வாங்கிப் பயன்படுத்திக் கொள்ள என் மனைவிக்குப் பணித்தேன். அதுவே எங்கள் வாழ்க்கைப் பழக்கமாகிவிட்டது. அரிசியையோ வேறு மளிகைப் பொருள்களையோ, ஒட்டுமொத்தமாக ஒரு பத்துப் பதினைந்து நாட்களுக்குரிய வகையில்கூட வாங்கிப் போடப்பட்ட வரலாறு அன்றும் இல்லை; இன்றும் இல்லை. எல்லா வகையிலும் தென்மொழிப் பணிகளுக்கே மிக மிக முதன்மை தரப்பெற்றது. தென்மொழிக்குப் பிறகுதான் என் குடும்பம்; மனைவி மக்கள்; என்னுடைய அவர்களுடைய தேவைகள் ஆகியன எல்லாம். எனவே, தென்

மொழிக்கு எவர் எந்நிலையில் தொடர்பு கொண்டு துணை வந்தாலும், வருவதாகக் கூறினாலும் அவர்களை மலைபோல் எண்ணி மதித்தேன்; போற்றினேன்; புரந்தேன்.

அக்கால் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தென்மொழிக்கு ஒரு பாசறையாகவே இருந்தது. அக்கால் அண்ணாமலையில் பயின்ற தமிழ்ப்பற்று மிகுந்த மாணவர்களுள் பலர் தென்மொழித் தொடர்புடையவர்களாக இருந்தனர். அவர்கள் அனைவரும் நம் இல்லத்திற்கு வருவர்; ஒருநாள் இருநாள் தங்குவர். உண்ணல், உறங்கல் அனைத்தும் நம் வீட்டில்தான். முழுநாளும் தனித்தமிழ் வளர்ச்சித் தொடர்பாக ஆய்வுகள், கருத்துப் பரிமாற்றங்கள், சொல்லாக்கங்கள் முதலியவை தங்கு தடையின்றி நடக்கும். அக்கால் பாவாணர் சேலத்திலிருந்து ஓய்வுபெற்றுப் பல வகையான முயற்சிகளுக்குப் பின் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் திரவிட மொழி வாசகராக (Reader in Dranidian Philology) இருந்தார். தென்மொழி பெரும்பாலும் அவர்க்காகவே தொடங்கப் பெற்றதெனின் மிகையாகாது. அந்தப் பெயரும் அவர் சூட்டியதுதான். தொடக்கத்தில் அவரையே அதற்குச் சிறப்பு ஆசிரியர் ((Honorary Editor) ஆகவும் குறித்திருந்தேன். எப்படியோ தட்டுத் தடுமாறிப் பெருத்த இழப்புடன் தென்மொழி ஏறத்தாழ ஓராண்டு நடைபெற்றது. இறுதியில் எவ்வளவோ முட்டுக்கொடுத்தும் நிலை நில்லாமல் படுத்துக் கொண்டது. அதன்பின ஓராண்டு இடைவெளி கடந்து 1962-இல் மீண்டும் நிலை நிறுத்தப் பெற்றது. அதற்குள் எத்தனையோ கதைகள் நடந்தன; வரலாறுகள் நிகழ்ந்தன. அவற்றுள் அவலச் சுவை மிகுந்தவை சில; உவகைச் சுவை நிறைந்தவை சில. ஏக்கப் பெருமூச்சுகள் சில; எள்ளல் நாடகங்கள் சில, இழிவுகள் சில; பழிகள் சில; பள்ளம் படுகுழிகள் சில. அவையெல்லாம் இப்பொழுது தேவையில்லை. தேவையானபொழுது மிகவும் விரிவாக எடுத்துரைக்கப் பெறும். இக்கால் நான் கூற வந்தனவெல்லாம் தென்மொழித் தொடக்கம் ஏதோ ஏனோதானோ என்று நிகழ்ந்த நிகழ்ச்சியில்லையென்பதையும், அதை நிலைநிறுத்தப் பட்டபாடு ஏதோ நேர்ச்சியான் நடந்த விளைவு இல்லை என்பதையும் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

தென்மொழி தங்கள் தங்கள் கட்சிக்குச் சார்பான இதழ் என்று ஒவ்வொரு கட்சியினரும் கருதினர். அத் தொடக்க நிலைக் கருத்தும் அடியோடு மாறி, அஃது எந்தக் கட்சிக்கும் சார்பான இதழ் இல்லை என்று இக்கால் கருதப்பட்டு வருகிறது. இந்நிலையொன்றே அதன் நடுநிலைக்குத் தலையாய சான்றாகும். இவ்வகையில் எனக்கும் பாவாணர்க்கும் நடந்த கருத்து மாறுபாடுகள் பலவாகும். ஆனால், அவையெல்லாம் துளியும் புறத்தே வெளிப்படாதவாறு கட்டிக் காத்துக் கொண்டேன்.

ஒருமுறை பாவாணரை ஒரிருவர் மதிமயக்கித் தி.மு.க. வில் சேரும்படி தூண்டி, அவர் தி.மு.க. வில் சேர்ந்து விட்டதாக 'முரசொலி'யில் ஓர் அறிக்கையையும் வெளியிடச் செய்தனர். அதையறிந்து காட்டுப் பாடிக்கு ஓடோடிச் சென்று தடுத்து நிறுத்தினேன்! நாம் தமிழுக்காகவே வாழவேண்டுமேயல்லாமல் எந்தக் கட்சியிலும் சேரக் கூடாதென்றும், நாம் அனைத்துக் கட்சியினர்க்கும் பொதுவானவர்களாக இருக்க வேண்டுமென்றும் அவரிடம் அப்போது கூறினேன். இந்நிலையும் அதன் பின்னர் நடந்த ஓரிருவெளிப்படையான, மறைமுகமான நிகழ்ச்சிகளும் என்னை நிலையாகத் தி.மு.க. விற்கு மாறானவனாகக் கருதும் படி செய்தன. அதன் முடிவாக அன்றுமுதல் இன்றுவரை தி.மு.க. வின் ஆதரவோ கலைஞரின் துணையோ தென்மொழிக்குக் கிடைக்க வில்லை. மாறாக அக்கட்சியின் உள்மூக எதிர்ப்புகளையும் தடைகளை யும் தென்மொழி எதிர்கொண்டு, தன்னை வலுப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்தது.

இவ்வாறு, இத்தனைப் புயல்களுக்கும், பூசல்களுக்கும் நிலை குன்றிப் போகாமல் பீடு நடைபோட்டு வந்த தென்மொழியை இக் கால் நிறுத்த வேண்டி நினைக்கிறேன் என்றால் காரணம் இல்லாமல் இல்லை.

'தென்மொழியை, என் கண்ணொளியை,
என்மூச்சுயிர்ப்பைச் சாகும் வரைத்
தேர்ந்த உயிர்த் தொண்டெனவே ஆற்றிவருவேன்;
வாழ்வு தீர்ந்துவிடின்
வேற்றுடலம் மாற்றி வருவேன்!"

என்று எழுதிய கைகள்தாம் 'தென்மொழியின் பாசறை மூடப்படும்" என்று எழுதுகின்றன. ஏன்? அச்சத்தினாலா? அவலத்தினாலா? துன்பத்தினாலா? இல்லை சுமை தாங்க முடியாமலா? இல்லை; இல்லவே இல்லை.

தென்மொழிக்காகவே என் உயிர், மூச்சு, உடல், பேச்சு இயக்கம், வாழ்க்கை அனைத்தும் இயங்குகின்றன. பின் ஏன் இவ்விதழை நிறுத்த வேண்டும்! இதில் ஊதியம் வரவில்லை என்று கண்டு கொண்டேனா? அல்லது ஊதியமே வராது என்று தீர் மானித்து விட்டேனா? அதுவும் இல்லை. தென்மொழியால் தொடக்கத்திலுருந்து வந்தது இழப்புதானே தவிர ஊதியம் அன்று, எப்படியும் ஒரு மாதத்திற்கு எழுநூறு உருபா இழப்பு என்பது தென்மொழியின் மாற்ற முடியாத வரலாறாகப் போய் விட்டது. அவ்விழப்பை என் சொற்பொழிவு வருமானத் தொகையாலும், நூல்களின் விற்பனைப் பணத்தாலும், தென் மொழிமேல் மாறாத அன்பு வைத்த பேருள்ளங்களின் நன்கொடை யாலும், அவ்வப்போது வாங்கும் சிறுசிறு கடன் தொகைக ளாலும் ஒருவாறு ஈடுகட்டி விடுகிறேன். பின்னர், எதற்காகத் தென்மொழியை நிறுத்துகிறேன் என்று கூற வேண்டும்?

Scanned with CamScanner

சிலர் கேட்கிறார்கள். "தென்மொழியால் பலர் தனித் தமிழ்ப் பற்றுள்ளவர்களாக மாற்றப்பட்டுள்ளார்கள்; பலர் தமிழ்த் தொண்டில் ஆங்காங்கே முனைந்து நிற்கிறார்கள். அவை யெல்லாம் விளைவில்லையா? பயனில்லையா? பின் ஏன் அதை நிறுத்த வேண்டும்?" என்று. அவர்களுக்குக் கூறுவேன்:! அவையெல்லாம் பொய்யில்லை; உண்மையில்லாமலில்லை. ஆனால் அவை மட்டுமா நாம் எதிர்பார்த்த மாற்றங்கள்? செய்ய நினைத்த செயல்கள்?. இல்லை; இவற்றைவிட நிலையான அடிப்படையான மாறுதல்களே நாம் செய்ய நினைத்தவை. தமிழ்மொழிக்கு எவராலும் அழிக்க முடியாத ஆக்கங்களே நாம் உருவாக்க எண்ணியவை. அவற்றைப் பற்றி நாம் மீண்டும் நினைவு கூறும் காலம் வந்துவிட்டது. உறுதி செய்யும் நேரம் வந்து விட்டது? அவை எவை?

இன்னும் சிலர் கூறுகிறார்கள்! தென்மொழியால் உருவாக்கப் பெற்றவர்கள் வளர்ச்சியுற்றவர்கள் தாமே! மேம்பாடு அடைந்த வர்கள் தாமே! அவர்கள் நம்மினின்று பிரிந்து, தனித்தனி இதழ் களை இயக்கங்களை நடத்துகிறார்களென்றால், அது வளர்ச்சிதானே! அவர்களைக் கண்டு நாம் சோர்ந்து போகவா வேண்டும்? மகிழ்ச்சி யல்லவோ கொள்ள வேண்டும், என்று. ஆம் மகிழ்ச்சி தான்! நிறைவுதான்! உண்மைதான்! ஆனால் அம் மகிழ்ச்சியும் நிறைவும் உண்மையும் எத்துணைக் காலத்திற்கு நிலைத்து நிற்கும் திறஞ் சான்றவை? எத்தனை அடிப்படை ஆக்கங்களை விளைவிக்கும் உரம் கொண்டவை? எண்ணிப் பார்க்க வேண்டும். நாம்! அரிமா நோக்கமாக, ஓர் ஆய்வு நோக்காக, நாம் எண்ணிப் பார்த்தே ஆக வேண்டும். ஆய்வு நோக்காக எண்ணிப் பார்த்த பின், நிலை இப்படியே போனால், நம் நாட்டின் அடித்தள மக்களின் முடிவு தான் என்ன? அவர்களின் முன்னேற்றந்தான் எது? அவர்கள் எதனால் இன்னமும் முன்னேறாமல் இருக்கிறார்கள்? எல்லாக் கட்சித் தலைவர்களும், அவ் வடித்தள மக்கள் முன்னேறாமைக்குக் காட்டும் காரணங்கள் சரிதாமா? அவர்களுக்காக நம் தலைவர்கள் உண்மை யாக உழைக்கிறார்களா? இல்லை, தங்களுக்காக உழைத்துக் கொள் கிறார்களா? இவற்றைப் பற்றியெல்லாம் கொஞ்சம் மனம் விட்டுச் சிந்தித்தாக வேண்டும். அச்சிந்தனைக்கும் திறனாய்வுக்கும் தென் மொழி களனாக முடியுமா? அந்தக் களம் மற்றவர்கள் வந்து கலந்து தங்கள் மனக் கருத்துகளைத் தெரிவிப்பதற்கும், செயல் பாடுகளைத் தொடங்குவதற்கும் தொடருவதற்கும், அல்லது போராடுவதற்கும் உரிய நிலைகளை வகுத்துக் கொடுக்குமா? அடித்தளத்தை அமைத்துத் தருமா? —என்பன பற்றியெல்லாம் தொடர்ந்து சிந்திக்கின்றேன்.

இச் சிந்தனைதான் என்னைத் தென்மொழியைத் தொடர்ந்து நடத்துவதற்கும் இல்லையானால் இடை நிறுத்தி விடுவதற்கும் உறுதியான முடிவை எடுக்க முடியாமல் ஒரு தடுமாற்றத்தை எனக்குக் கொடுக்கின்றது. அத்தடுமாற்றம் அறிவின் பாற்பட்ட தன்று, செயலின்பாற்பட்டது. செயலின்பாற்பட்ட தென்றால், என்னுடைய செயலைப் பொறுத்த நிலையால் அன்று என்னைச் சார்ந்து வருபவர்களின் — அவர்கள் எனக்குத் துணையாக வரும்

Scanned with CamScanner

தன்மையின்பாற்பட்டதாகும். என்னதான் நான் அறிவுடைய வனாக இருந்தாலும் சிந்தனைத் தெளிவுள்ளவனாக விருந்தாலும், ஆற்றலுடையவனாக இருந்தாலும், செயல்திறம் உடையவனாக விருந்தாலும், எல்லாப் பக்கச் செயல்களையும் நான் ஒருவனே செய்து விட முடியாது. என் இரண்டு கைகளாலும் தழுவிப் பிடிக்க முடியாத பொருளை நான் ஒருவனே எப்படி நிலைபெயர்க்க முடியும்? தலை தூக்கிக் கொள்ள முடியும்? பக்கத்திற் கொருவராக வேனும் இருந்து கைதர வேண்டுமன்றோ? அவ்வகையில் கை கொடுத்து, எண்ணம், சொல், செயல், முனைப்பு, ஊக்கம் (அறிவாலன்று) —ஆகியவற்றுள் என்னுடன் ஒத்துழைப்புத் தர இதுவரை ஒருவரும் முன்வரவில்லையே!

அவர்களின் உழைப்பிற்கு ஊதியம் தரப் போதுமான செல்வம் இன்னும் நம்மிடம் வந்து வாய்க்கவில்லை. இல்லெனின் பொருள் கொடுத்தேனும் அத்தகைய ஆளை (அப்படி முன்வரும் ஒருவர் இருந்தாலும்) விலைக்கு வாங்கிக் கொள்ளலாம். அப்படி விலைக்கு வாங்கினாலும் அவர் என்போல் முழுநேரமும் முழு மூச்சாக இயங்குவார் என்று சொல்ல இன்னும் எனக்குத் துணிவு வரவில்லை. சிலரை ஒற்றிக்கு இரட்டாக எண்ணி ஏமாறி யிருக்கிறேன். சிலரை இரட்டிக்கு ஒற்றாக எண்ணும் படி அவர் களுடைய சூழல் அமைந்திருக்கிறது. அதனின்று தாண்டிக் குதித்து வெளியேறி வரும்படியான துணிவு அவர்களுக்கு இருந்த தில்லை என்றே இதுவரை உணர்ந்திருக்கின்றேன்.

தொடக்கத்தில் நம் தொண்டுக்குத் துணையாக வந்தவர்களெல் லாரும் என்னையே குறைகூறிவிட்டு வெளியேறிப் போனார்களே தவிர, அவர்கள் அவ்வாறு போன இடத்திலிருந்து ஓர் அடிகூட எடுத்து வைக்க முடியாதவர்களாகவே போய்விட்டார்கள். இல்லெனில் தென்மொழி போலும் ஓரிதழையாவது அவர்கள் தொடங்கியோ, தொடங்கியவர்கள் தொடர்ந்து நடத்தியோ தென்மொழியின் தேவையை இல்லாமல் செய்திருக்க மாட்டார்களா? அவ்வாறு செய்ய முடியவில்லையே! ஏனென்றால், அவர்கள் நடத்திய இதழ்களிலெல் லாம் தனித்தமிழிருந்தது; இலக்கியம் இருந்தது; தணல் வீசும் கருத்து களிருந்தன! ஆனால் அங்கு நானில்லையே! அஃதாவது நான் வெளிப் படுத்தும் உண்மையில்லையே! நேர்மையில்லையே! துணிவில்லையே! சூடில்லாத நெருப்பாகவன்றோ அவையெல்லாம் இருந்தன. அது போலும் ஒரு நெருப்புதானே, தமிழனின் கடந்த காலம் முழுவதும் பற்றியெரிந்து வந்திருக்கிறது. இதனை மனச் செருக்காலோ அறிவுச் செருக்காலோ, வினைச் செருக்காலோ நான் கூறவில்லை. மிகுந்த ஆற்றாமையுடன் (ஆதங்கத்துடன்), ஆர்வத்துடன், அக்கறையுடன், அழுத்தத்துடன் மட்டுமன்று அதேபொழுது தமிழ் மேலும் தமிழினத் தின் மேலும் தமிழ் நாட்டின் மேலும் வைத்த அன்புடனும் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். அன்பர்கள் என் இத் துணிவும் துல்லி யமும் நிறைந்த உண்மை உரைக்கு என்னைப் பொறுத்துக் கொள் வார்களாக.

(தொடரும்)

பாவலரேறு இல்லத் திருமணம்!



சித்திரச் செந்தாமரை — ஆறிறைவன் திருமணம்

கடந்த ஆடவைத் திங்கள் 2-ஆம் பக்கல் (16-6-83) வியாழக் கிழமை காலை 9 மணியளவில், சென்னை, மயிலாப்பூர், கற்பகம் விடுதியில், **பாவலரேறு பெருஞ்சித்திரனார் தாமரை பெருஞ்சித்திரனார்** அவர்களின் மூன்றும் மகள் செல்வி. **சித்திரச் செந்தாமரை** (அறி.மு)க்கும், கோவை மாவட்டம், சிங்கராம் பாளையம், காலஞ்சென்ற கணபதி அவர்களின் மகன் பர். அ. **ஆறிறைவன்** என்னும் ஆறுச்சாமிக்கும், இசைப்புலவரும் ஓய்வுபெற்ற இயக்கத் துறைப் பொறியாளர் (Executive Engineer) திரு. ப. **தண்டபாணி** அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணம் மிக எளிமையாகவும் அதேபொழுது மிகச் சிறப்பாகவும் நடைபெற்றது. திருமணத் தொடக்கத்தில் பாவலரேறு வரவேற்புரை நிகழ்த்தினார். உயர் திருவாளர்கள் செ. பன்னீர்ச்செல்வம் ('தமிழம்' ஆசிரியர், திருக்குறள் பெருமாள், புலவர். தன்னொளியான், பர், அரசேந்திரன், ப. துரையரசன், விழுப்பரையன், தமிழ்மணி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் தமிழூர் ப. அருளி வணி. இ; ச.இ நன்றியுரை வழங்கினார். மாலை 5 மணியளவில் அதே இடத்தில் மணமக்களுக்கு வரவேற்பு அளிக்கப்பெற்றது.

கருமம் தமிழ்ச் சொல்லே!

மொழிஞாயிறு — ஞா. தேவநேயப்பாவாணர்

கருமம் என்பது, குமரிக் கண்டத்தில் கரு என்னும் முதனிலையினின்று தோன்றித் தொன்றுதொட்டுத் தமிழில் வழங்கிவருவதும், அடிநாளில் ஐரோப்பா சென்ற தமிழர் அல், திரவிடர் மொழியிற் கலந்திருந்ததுமான தூய தமிழ்ச் சொல்லாகும்.

கருமம் = செயல், தொழில், கடமை. R. V. Karman
கரு — கருமை — கருமம்.
ஒ.நோ : பரு — பருமை — பருமம்.
உவ — உவமை — உவமம்.

மகரவீற்றுப் பெயர்கள் தமிழிலும் னகர வீறாகத் திரிதலுண்டு.

எ.டு : பருமம் — மருமன், உவமம் — உவமன்.

கரு—த்தல் = செய்தல். இது வழக்கற்றுப் போன தமிழ் வினைகளுள் ஒன்றும். அட்டு, பொட்டு, கள், நள் முதலிய பல வினைகள் வழக்கற்றுப் போனமை காண்க.

அட்டுதல் = வார்த்தல் :
பொட்டுதல் = பொருத்துதல், கட்டுதல்.
பொருத்து — பொத்து — பொட்டு.
பொட்டு + அணம் — பொட்டணம்.

ஒ. நோ. கட்டு + அணம் — கட்டணம்.
கட்டல் = களவு செய்தல். கள்ளாமை = களவு செய்யாமை.
நட்டல் = நட்புச் செய்தல்.

ஒரு பொருள் பற்றிப் பல சொல்லியிருப்பின், அவற்றுள் ஒன்றும் சிலவும் வழங்கப்படாமற் போதல் இயல்பே.

கரு-த்தல் என்னும் சொற்கு இருவகையில் வேர்ப் பொருள் கூறலாம்.

1. கருமை = பெருமை (திவா.), மிகுதி. கடு — கரு.
கடுத்தல் = மிகுதல். 'நெஞ்சங் கடுத்தது' (குறள்: 706)
கருத்தல் = முன இல்லாத தொன்று மிகுமாறு செய்தல், செய்தல்.

ஆங்கிலத்தில் make என்னும் சொல்லிற்கு, இதே கருத்தில், magnus (L), megas (Gr.) என்னும் சொற்களின் mag என்னும் வேரையே மூலமாகக் காட்டுதல் காண்க.

கருமம் — கம்மம்.(> Pkt. Kamma) = 1. கம்மியர் தொழில், smith's work 'கம்மஞ் செய் மாக்கள்' (நாலடியார். 393)

2. உழவுத் தொழில். கம்மவார் (கம்மம் + அவர்)— உழவுத் தொழில் செய்யும் ஒரு தெலுங்க வகுப்பார்.

Scanned with CamScanner

கம்மம் — கமம் = உழவுத் தொழில்.

நாகரிக வுலகில் முதன் முதல் ஏற்பட்ட கைத்தொழில் உழவுத் தொழிலே. அதனால், திருவள்ளுவர் உழவரைக் 'கைசெய்தூண் மாலையவர்' (1035) என்றார்.

கமம் — கம் = 1. உழவுத் தொழில். 2. கம்மியர் தொழில். 'க மங் கம்மும்' (தொல். எழுத். 328).

கம்மாலை = 1. எருது பூட்டியிழுக்கும் இறைவையேற்றம்.
2. கன்னார் தொழிற் கூடம்.

கம்மாலை — கமலை — கவலை.

கமலை என்பது பாண்டி நாட்டு வழக்கு, கவலை என்பது சோழ கொங்கு நாட்டு வழக்கு.

கன்னட தெலுங்கு மொழிகளில் (சிறப்பாகக் கன்னடத்தில், வகரம் பகரமாகத் திரிவதால், கவலை என்பது அவ்விரு மொழிகளிலும் கபிலெ (Kapile) எனத் திரிந்து வழங்குகின்றது. இதைக் குராற் பெற்றத்தைக் குறிக்கும் கபிலா என்னும் வடசொல்லோடு மயக்கி, (கவலையேற்றத்தைக் கபிலையேற்றமாகக் கொண்டு) கபிலை எனக் குறித்துள்ளனர் சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் அகராதியாளர். முதலாவது, கபிலையென்று தமிழ்நாட்டில் ஓரிடத்திலும் வழங்க வில்லை. இரண்டாவது, கபிலை என்பது கபில நிறமுள்ள பெற்றம் (பசு). கமலையில் காளைகளைக் கட்டி நீரிறைப்பரேயன்றிப் பெற்றங்களைக் கட்டியிறையார்.

கமலை வண்டி, கமலையுருளை, கமலைவடம், கமலைக்குழி முதலிய பலசொற்கள் கமலையிறைவையொடு தொடர்புள்ளவை. இவற்றை மேற்குறித்த அகராதியாசிரியர் அறவும் அறிந்திலர்.

பண்ணுதல் என்னும் சொல்லும் இதே கருத்தடிப்படையில் அமைந்ததாகத் தோன்றுகின்றது. பண் — பண்ணை = கூட்டம், பெருங்கூட்டம், தொகுதி, மிகுதி.

2. கருத்தல் = கை கருக்குமாறு ஒரு வினை செய்தல், செய்தல்.

தொடர்ந்து வேலை செய்வதனால், கரு நிறத்தார் கை கருப்பதும் பொன்னிறத்தார் அல்லது வெண்ணிறத்தார் கை சிவப்பதும் இயல்பு, 'செய்த கை சேவேறும்' என்பது பழமொழி. சேவு - சேகு = செவ்வயிரம்.

செய் — செம்மை. செய்தல் - கை சிவக்குமாறு ஒரு வினை செய்தல், செய்தல்.

இவ்விருவகை மூலங்களுள் எது உண்மையாயினும், கருமம் என்பது தமிழ்ச் சொல்லாதல் தேற்றம். அது வடமொழியில் திரிந்த முதனிலையேயன்றி வேர்ப் பொருள் ஏதுமில்லை.

Scanned with CamScanner

கரு + வி — கருவி — ஒரு தொழில் செய்வதற்கு வேண்டும் மூலப்பொருள் அல்லது துணைப்பொருள். இச் சொல் தமிழென்பதை எவரும் மறுக்கார். இது தமிழாயின், இதனொடு தொடர்புள்ள கருமம் என்பதும் தமிழேயாதல் வேண்டும்.

கரு + அணம் – கரணம் — செயல், மணச் செயற்சடங்கு, செயற்கு வேண்டும் கருவி. கரணம் – கரணிகம் — அறிவுப் புலக் கருவியான அகக் கரணம். R. V. Karana

கரணம் என்பதை நீட்டிக் காரண என்றும், (அதனொடு பொருந்தக்) கரு என்னும் முதனிலையை நீட்டிக் கார்ய என்றும், வித்தும் விளையும் போலக் கருமமும் பற்றிய இரு நுண் பொருட் சொற்களை அமைத்துக் கொண்டனர்-வடமொழியாளர். இவற்றைத் தமிழிற் சேர்த்ததினாலேயே, கருமம், கரணம் என்றும் சொற்களும் வடமொழியில் வழங்குதல் பற்றி வடசொல்லெனக் கருதப்பட்டன. காரணம்,காரியம் என்னும் இரண்டிற்கும் ஈடாக, கரணியம்,கருமியம் என இரு சொற்களை அமைத்துக் கொள்ளலாம்.

கம்மக் குடம் — கம்மியர் (கன்னார்) செய்த குடம். கம்-கம்மி— குயவன் 'மட்கலஞ் செய் கம்மி' (பாரத. திரௌ. 64) கலஞ் செய்யும் ஒப்புமையால், குயவனும் கன்னான் போற் கருதப் பெற்றான்.

கம் – கம்மியம் — 1. கைத்தொழில்; 2. கம்மாளர் தொழில்.

கம்மியம் - கம்மியன் — 1. தொழிலாளி
'கம்மியரு மூர்வர் களிறு' (சீவக.495)·
2. கம்மாளன் (தி வா.)
3. நெசவாளி. 'கம்மியர் குழீஇ' (மதுரைக் 521)
4. பொறிவினைஞன், mechanic

கம் - கம்மாளன் (Pkt. Kammara) — கொல்லன், தச்சன், சிற்பன், தட்டான், கன்னான் என்னும் ஐவகைக் கம்மியருள் ஒரு வகையன்.

கம்மாளன் - கம்மாணன். 'கம்மாண சேரியும்' (S.I.I. ii,) 43 ஒ.நோ : களவாளி - களவாணி, வளரி – வணரி.

கொல்லனைக் குறிக்கும் கருமகன் என்னும் சொல், கருமம் என்னும் சொல்லினின்று திரிந்த தனிச்சொல் அன்று; இரும்பை யுணர்த்தும் கரு என்னும் சொல்லும், ஆடவனைக் குறிக்கும் மகன் என்னும் சொல்லும் சேர்ந்த கூட்டுச் சொல்லாகும். கருமகன் — கருமான் — கருமன் — கொல்லன் (பிங்).

கருங்கொல் — இரும்பு (சூடா.)

கருங்கொல்லன் — கருமான். கருமகன் — கொல்லன். 'கருமகக் கம்மியன்' (கம்ப. பம்பா. 37) கருமம் என்னும் சொல்லினின்று கருமகன் என்பது தோன்றியிருப்பின், 'கருமக் கம்மியன்' என்று மிகைபடு சொல்லாற் குறிக்க வேண்டியதில்லை.

இனி, கருமையென்னுஞ் சொற்கு வலிமைப் பொருளும் (புறம். 2; சிலப். 5,29) இருப்பதால், 'கருங்கைக் கொல்லன்' (சிலப். 5,29) என்னும் தொடரைச் சான்றாகக் கொண்டு, கருமகன் என்பதற்கு வலியவன் அல்லது வன்செயலன் என்று பொருளுரைக்கவும் இடமுண்டு. ஆயினும், அஃது அத்துணைச் சிறப்பும் பொருத்தமுடையதன்று.

கருமான் என்பது, செம்மான் (Shoemaker) என்பதனொடு நிறம் பற்றி முரண்பட்டது. செம்மகன் – செம்மான்.

ஒ. நோ : Blacksmith + white smith (worker in tin).

செம்மான் என்பதை, Carman (S.) என்னும் தோற்பெயரின் திரிபாகச் சென்னைத் தமிழகராதி குறித்திருப்பது தவறாகும்.

Cf. E· tan. to convert raw bide into leather, tomake brown by exposure to sun.

ஒரு குலத்தைக் குறிக்கும்போது, பலர்பாற் பெயரொடு அகரச் சாரியை சேர்த்துக் குறிப்பது தமிழர் வழக்கம்.

எ. டு :	ஒருமைப்பெயர்	பன்மைப்பெயர்	குலப்பெயர்
	தட்டான்	தட்டார்	தட்டாரக்குலம்
	செக்கான்	செக்கார்	செக்காரக்குலம்
	வண்ணான்	வண்ணார்	வண்ணாரக்குலம்

இம்முறைப்படி, கருமான் சொல்லினின்று கருமாரக் குலம் என்பது அமையும். இதை அடிப்படையாகக் கொண்டு கொல்லன் பெயர் Karmara என்று இருக்கு வேதத்தில் அமைந்ததாகத் தெரிகின்றது.

செய்தலைக் குறிக்கும் கரு என்னும் வினைமுதனிலை, வடமொழியில் கரு (Kr) என்றும், இலத்தீனில் (Cres) என்றும் நிற்கும். ஓர் இயல்பான வேர்ச்சொல் உயிர் முதலாய் அல்லது உயிர்மெய்ம் முதலாய் இருக்குமேயன்றி, மெய்ம் முதலாய் இராது. கர்ம, கர்ண, கர்த்தா, காரண, கார்ய முதலிய திரிசொற்களெல்லாம், வடமொழியிலும் உயிர் மெய்ப் முதலாயே யிருத்தல் காண்க. O

திராவிட இயக்கங்களின் பார்வையில் இந்துசமயம்

— சிந்தனைச் செம்மல். கு.ச. ஆனந்தன்

வகுப்பும் [வர்க்கமும்] சாதியமும்

ஒரு நாட்டினுடைய பொருளியல் ஏற்றத் தாழ்வுகள் அம் மக்களை **'வகுப்புகளாக'** (வர்க்கங்களாக)ப் பிரிப்பதற்கு வழிவகை செய்கின்றன. ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்த வரையில், இந்தியக் குமுகாயத்தில் நெடுங்காலமாக நிலவியிருக்கும் பொருளியல் வேறுபாடுகள் 'வகுப்புகள்' (Classes) அமையத்துணை புரியவில்லை. அதற்குச் சாதிய அமைப்பு தடையாய் இருந்தது. இந் நாட்டில் சாதியத்தைத் தவிர்த்து,வகுப்புப் போராட்டங்கள் என்பன தனித்து உருவாகி நடைபெற முடியா. சாதி ஒழிப்புப் போராட்ட மான குமுகாயச் சமன்மை பெறும் போராட்டம் முதல் நிலையில் தொடங்கி, அதன் பின்னரே வகுப்புப் போராட்டம் (Classes Struggle) நடைபெறும்.

காரணம் என்ன ?

ஒரு வர்க்க அமைப்பில் (Class Society) குமுகாயத் தகுதியும் (Social Status) பொருளியல் தகுதியும் (Economic Status) இணைந்து செல்கின்றன. அந்த அமைப்பில், ஒருவன் தனது பொருளியல் தகுநிலைக்கு ஏற்பவே குமுகத் தகுநிலையைப் பெறுகிறான். ஆனால் இதற்கு மாறாக சாதிய அமைப்பில் அதன் அடிப்படையில் உருவாகும் குமுகத் தகுநிலையும் அதன் நிலையான காப்புறுதியும் இணைந்தே நிற்கின்றன; **அவற்றைப் பொருளியல் வேறுபாடுகள் அணுக முடிவதில்லை.** வகுப்பு அமைப்பில் உள்ள அடித்தள மக்கள் பொருளியல்-காரணிகள், போட்டி மற்றும் செயற்பாடுகளின் - காரணமாக கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டனர். ஆனால் சாதிய அமைப்பிலோ வருணாச்சிரம நெறியால், குமுகாயம் அமைக்கப்பட்ட காரணத்தால் சாதி வழியில் உறுதிப்படுத்தப்பட்ட குறிப்பிட்ட தத்தம் தொழிலை மட்டுமே ஒருவன் செய்யக்கூடிய உரிமை படைத்தவனாகிறான். ஒரு சாதியினருக்கு வகுக்கப்பட்ட தொழில்களை மற்ற சாதியினர் செய்வதற்குப் பொதுவாக அனுமதிக்கப் படுவதில்லை. ஒரு தொழில் குலத்தின் உறுப்பினர் இந்துசமய அமைப்பு முறையில் வேறு எந்தத் தொழிலையும் செய்ய அனுமதிக்கப்படுவதில்லை. இந்நிலை, குடியாட்சித் தன்மைக்கும் மாந்த உரிமைகளுக்கும் முரணானது; வல்லாண்மையொடுகூடிய கொடுங்கோன்மை. வெள்ளையர் அரசு வந்தபின்னர், அண்மைக் காலத்தே, இந்நிலையில் சிறிது மாற்றம் தென்படுகிறது.

Scanned with CamScanner

சென்ற பல நூற்றாண்டுகளாக இந்த அவலநிலை நடைமுறையில் இருந்தும்கூட, இதற்கெதிரான சிறு எதிர்ப்போ, முறையான போராட்டமோ, இந்தியாவில் உருவாகவில்லை. ஏன்? இந்துசமயம் தந்த வேற்றுலகக் கவர்ச்சியும், அதன் ஊளுத்துப் போன மூட நம்பிக்கைகளும், இறைபற்றிய – குலத்துக்கேற்ற – தன்னலப் பார்வையும் ஒரு வகையில் காரணங்கள் தாம்; என்றாலும் அவைமட்டுமே முழுமையான காரணங்கள் அல்ல. **மிக நுண்மையான பிற்போக்குத் தனத்தை, முற்போக்குப் பொருளியல் தொழில்நிலை என்ற மூலாம் பூசி ஒவ்வொரு சாதிய உறுப்பினர்களையும் அதில் மூழ்கடிக்கும் மிக மிக வஞ்சகமான சூழ்ச்சியை வேத, தர்மசாத்திர ஆகமங்களின் துணையுடன் உளவியல் அடிப்படையில் சாதிய உளப்பாங்கிலிருந்து மீளமுடியாத வகையில், நிறுவி விட்டதே அதன் அடிப்படைக் காரணமாகும்.**

பார்ப்பனர் மற்றும் தாழ்த்தப்பட்டவர் நீங்கலாக, மற்ற ஒவ்வொரு சாதியினரும் ஒரே நேரத்தில் உயர்ந்தவராகவும், தாழ்ந்தவராகவும் கருதப்படுகிறார். ஒவ்வொரு சாதியினரும், அவருக்கும் மேலான சாதியினரை விடத் தாழ்ந்தவர் ஆவர்; அதே நேரத்தில் அவருக்கும் கீழான சாதியினருக்கு உயர்ந்தவர் ஆவர். சான்றாக, ஒரு செட்டியாரை எடுத்துக் கொண்டால், அவர் தனக்கு மேல் சாதியினருக்குக் கீழானவர் (அடிமை); தனக்குக் கீழ்ப்பட்ட சாதியினருக்கு அவர் மேலானவர் (ஆண்டான்). ஆக ஒரே நேரத்தில் அவர் இரண்டுமாக—அடிமையாகவும், ஆண்டானாகவும்–இருக்கிறார். இவ்வகையில் ஒவ்வொரு சாதியினரின் உளவியல் பாங்கும் தம்மை உயர்ந்தவர்-அதே நேரத்தில் ஒருவகையில் தாழ்ந்தவர்-என்ற மனமையை வளர்கிறது. அஃதாவது ஒரே நேரத்தில் அவர்கள் ஆண்டானாகவும் அடிமையாகவும் இருந்து ஒட்டு மொத்தமான சாதீய அமைப்பை உறுதியுடன் சமநிலைப்படுத்தி விடுகின்றனர்; அதனைக் கட்டிக் காத்தும் வருகின்றனர். தன்மானமோ அன்றிக் குமுகாயத் தகுநிலையோ, மற்ற உரிமைகளோ அச்சாதிய உறுப்பினரின் மனமைமிகு (பிரமை) உணர்வுகளில் மலாவதில்லை. இத்தகைய வஞ்சக நிலையை, இந்துசமயம் தனது சாதிய, வருண அமைப்பின் மூலமாகப் பல்லாண்டுகளாக நிலைப்படுத்தி விட்டது.

தமிழ் மக்களிடம் சமன்மைக் கொள்கைகள் மலராமல், குமுகாய முரண்பாடுகள் கூர்மையடையாமல், உரிமைப் போராட்டங்கள் வெடிக்காமல் நிலையான தேக்கத்தை அடைந்து விட்டதற்குச் சாதிய அமைப்பின் இவ்வகை உள்ளுருவே முதனிலைக் காரணம் என்க.

"இந்த ஊழிச்சமநிலையே, இந்து சமயத்தின் தனிச் சிறப்பு எனப் பேசப்படுகிறது. அஃதாவது வறுமை, கொடுமை, தன்மானமின்மை, தன்னம்பிக்கையின்மை அடிமை நிலை ஆகியவையே

இந்துசமயத்தின் பெருமை எனப் போற்றப்படுகிறது. இத்தகைய கழிசடையான — கடைகோடிப் பிற்போக்குத் தனமான ஒருகருத்தை. ஓர் அமைப்பை உலகின் எந்த ஒரு பகுதியிலும் நாம் காண முடியாது" எனத் திரு. **கருணமனோகரன்** அவர்கள் தமது '**இந்தியாவில் 'சாதியம்'** என்ற ஆய்வுக் கட்டுரையில் தெளிவாக்குகிறார். மேலும், சாதியங்களின் வகுப்புத் தன்மையையும், வகுப்புகளின் சாதியத் தன்மையையும் இணைத்து ஆய்ந்து, அவற்றை ஒரு சேர முறியடித்து,புதிய தொருகுமுகாயப்பொருளியல் அமைப்பை —ஒரு மாறுபட்ட வாழ்க்கை முறையை —அமைக்க இயக்க அளவில் நாம் செயல்பட வேண்டும்' எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

பாவலரேறு அவர்களின் மூலக்கொள்கையும், உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தின் மிகச் சீரிய—அடிப்படையான, நடைமுறைக் குறிக்கோளும்—இக் கருத்தையே, இன்னும் வலிவாகவும் தெளிவாகவும் சுட்டிக் காட்டுகின்றன என்றால் மிகையாகாது.

'சாதிச் சங்கங்கள் ஏன்?'

ஒவ்வொரு சாதிக்கும் தனித்தனியாகச் சங்கங்கள் இன்று உருவாகி வளர்வதற்குக் காரணமே இந்துசமயம் தந்த ஏற்றத்தாழ்வு கொண்ட குமுகாய அமைப்பு முறைதான். பல்லாண்டுகளாக நிலைத்துவிட்ட சாதி உணர்வுதான் இங்கு நடமிடுகிறதே தவிர, இந்து சமய உணர்வு ஒற்றுமை எங்கும் காணோம். அவ்வுணர்வு இயல்பாக இருக்கவும் முடியாது. இந்து மதம், அதன் சாதிகளுள், பல பாகுபாடுகளையும், பகையுணர்ச்சியையும் பலகாலம் வளர்த்து விட்ட காரணத்தினால்தான் இன்றைய சாதிச் சங்கங்கள் சாதிப் போராட்டங்கள் இயல்பானவையாக ஆகிவிட்டன. கல்வி மற்றும் குமுகாயத் துறைகளில் பல சாதியினர் பல நூற்றாண்டுகள் பிற்படுத்தப்பட்டுவிட்டனர். இன்றைய அரசு, அவர்களுடைய குமுகாய வளர்ச்சிக்கேற்ற கல்வி மற்றும் பதவிக்கான ஒதுக்கீடுகளையும் (Reservations) முன்னுரிமைகளையும் வழங்கும்போது, நெடுங்காலம் வாய்ப்பின்றிக் கிடந்தவர்கள், கிடைத்த அரிய வாய்ப்பை உரிய முறையில் பயன்படுத்திக் கொள்வதற்காகப் போட்டி போடுகின்றனர். ஒவ்வொரு சாதியினரும் முன்னுரிமை பெறுவதற்காகத் தனித்தனிச் சங்கங்களை நிறுவிக் கொண்டும் போராடுகின்றனர். அதன் விளைவாக ஒரு சாதியினருக்கு மற்றொரு சாதியினர் மேல் காழ்ப்புணர்ச்சி ஏற்படுகிறது. அதற்காகச் சாதிச் சங்கங்கள் வேண்டுமென்று நாம் கூறிடவில்லை. மாறாக 'சாதிப் பாகுபாட்டை அமைப்பு முறையாக நிலைபடுத்திவிட்ட இந்துமதமும் வேண்டும்; அதே நேரத்தில் சாதிகளும் கூடாது' என வாய்ப்பந்தல் போடுவதில் பயனில்லை என்பதையே இங்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

'மத மாற்றம் ஏன்?'

'மதமாற்றம்' தமிழகத்தின் தவிர்க்க இயலாத குமுகநோய். இந்து சமயத் தலைவர்களோ அதன் மெய்க்காரணத்தை மறைக்கின்றனர். வெறும் அறிவுரைகளையும் இந்து மதத் தத்துவப் பகுதிகளையும் வாய்கிழிய எடுத்துக் கூறுகின்றனர். ஆனால், அவர்களுக்கே அவற்றில் நம்பிக்கை இல்லை. அவற்றை நடைமுறைப்படுத்தவும் அவர்கள் அணியமாயில்லை.

மதமாற்றத்திற்குரிய மூலகாரணம்தான் என்ன?

தனி மாந்தரின் பிறப்புரிமைகளாக அடிப்படை உரிமைகள் (Fundamental Rights), அரசியல், பொருளியல், குமுகாயத் தளங்களில் சமன்மைக் கண்ணோட்டத்துடன் அணுகப்படும் இந்நாளில்-'உலகளாவிய மாந்த இனம்' என்ற ஏற்றமிகு குறிக்கோளை நாடி, மக்கள் வேகமாக நடைபோடும் இக்காலத்தில்—சமய வாழ்க்கையிலும், குமுகாய வாழ்க்கையிலும் ஆலய வழிபாட்டிலும் கூடக் குறைந்தபக்க மாந்த உரிமைகள் மறுக்கப்படும் தாழ்நிலை இந்து மதத்தில்தான் உண்டு. இந்தக் கேடுகெட்டநிலை திட்டமிட்டு வளர்க்கப் பட்டுவிட்டது.

இந்துவாகப் பிறப்பவன், சாதியுடனே பிறக்கிறான். ஏற்றத் தாழ்வுடன் வாழ்கிறான். பார்ப்பனியம் தந்த கொடுமை நிறை விளைவுகளை ஏற்றுக்கொள்கிறான். அரசமைப்பும், அவன் மதச்சட்டமும் அவனுக்குக் குமுகாயச் சமத்துவத்தை வழங்குவதில்லை. தாழ்ந்த சாதிக்காரன் என்ற செயற்கையான குமுகநிலைக்கு ஆளாகிறான். இழிவுடன் சாகிறான். அவனது அறவியலோ, ஒழுக்கமோ, கல்வியோ, பதவியோ அவனது சமயக் குமுகத்தினுள் அவனுக்கு உயர்வைத்தருவதில்லை. முறையான வழிபாட்டுக்கும், இறையுணர்வுக்கும் வக்கற்றவனாகிவிடுவதால் குமுகாயச் சமன்மை என்பது அவன் வாழ்நாளில் கிட்டுவதில்லை. தன்மானத்தை விற்று 'இந்து' என வாழ்வதைக் காட்டிலும், தனது மாந்தத்தன்மையை ஏற்று, குமுகாயச் சமத்துவத்தைத் தந்து, மற்ற வாய்ப்புகளையும் பெற்றுத் தரும் வேறு மதங்களுக்கு அவன் தாவிவிடுவதில் தவறு என்ன? தவறு என ஏதாவது இருப்பின், அது மதம் மாறுபவனின் தவறன்று; இந்து சமயத்திலுள்ள பார்ப்பனியமும், சாதியமுமே அத் தவறைச் செய்யத் தூண்டியவையாகும். அவை அழிக்கப்படும் வரை விழிப்புணர்ச்சி பெற்ற சிலரை, வெறும் வாய்வேதாந்தங்கள் கவர்வதில்லை. மத மாற்றத்திற்குரிய மெய்யான—கசப்பான காரணம்—'இந்து' என்ற இழிநிலைதான்.

திராவிட இயக்கத்தின் திரண்ட பார்வை

மேற்சொன்ன கருத்துகளின் தொகுபொருளைப் பல்லாண்டுகளுக்கும் முன்பே **பகுத்தறிவுப்பகலவன் தந்தைபெரியார் அவர்கள்** வலிவுடன் வெளியிட்டார்கள். அவற்றையே தமது திராவிட இயக்கத்தின் ஒரு சிறப்புக் குறிக்கோளாகவும் கொண்டு நெடுங்காலம் செயல்பட்டார்கள். அவர்தம் கருத்தின் ஒரு பகுதி;

'இந்து என்பது சமுதாயப் பெயரா, இனப்பெயரா, மதப் பெயரா என்பதற்கு யாதொரு விளக்கமும் இல்லை. இந்து என்றால் இந்தியன் என்ற வார்த்தையின் சுருக்கச் சொல் என்பதல்லாமல் அதற்கு வேறு கருத்து எதுவும் இருக்க இடமில்லை. இந்து என்கின்ற சொல்லுக்கு ஆராய்ச்சியாளர்கள் பல பொருள்கள் சொல்லுகிறார்களே தவிர, அதற்கு மதம் என்ற பொருள் இல்லை. இந்து என்பது ஒரு மதத்திற்கு என்று சொல்லப்படுமானால், அதற்கு ஏதாவது ஆதாரமோ அலலது மதசம்பந்தமான இலட்சணமோ இருந்திருக்க வேண்டும்; அல்லது இருந்தாக வேண்டும். அந்த முறையில் இந்துமதம் என்பதற்கு எவ்விதமான மத இலட்சணமும் இல்லை...... சைவம், வைணவம் என்னும் மதங்களுக்குச் சிவன், விட்டுணு என்ற மதக்கடவுளர்கள் பெயர்கள் உள்ளன. வைதீக மதம், சுமார்த்த மதம் என்பவற்றிற்கு வேதம், சுமிருதி என்ற நூல்கள் இருக்கின்றன. மதக்கர்த்தாக்கள் பெயர் இல்லாமல் கடவுளர்கள் பெயர் இல்லாமல், சம்பந்தப்பட்ட நூல்கள் இல்லாமல், குறிப்பிடத் தகுந்த ஆதாரம் இல்லாமல் ஒரு மதம் இருக்கின்றது என்றால், அதுதான் இந்துமதம் என்றால், இந்த இந்து என்ற சொல் மதத்தைத்தான் குறிக்கிறது என்று யார்தான் ஒப்புக் கொள்ளமுடியும்? தவிர இந்து மதம் என்ற சொல் எந்த மத ஆதாரங்களிலும் காணப்படுவதே இல்லை. இந்து மதத்தின் கொள்கை இன்னதென்று சொல்வதற்கும் ஆதாரங்கள் கிடையாது .... இந்து மதத்தால் மேன்மையும் பயனும் அடைகின்ற பிராமணர்கள் இந்து மதம் என்பதாக ஒரு மதம் கிடையாது....... என்று சொல்லுகிறார்கள். மற்றொரு பார்ப்பனச்சாரார், வேதமும் சுமிருதிகளும, புராணங்களும்தான இந்து மதம்—மனுதர்மச்சாத்திரம் தான் இநது மதததிறகுச் சாத்திரம(சட்டம்) என்றும் சொல்லி அதை நடபபாக்கி வருகிறார்கள். வருணாச்சிரமத்தருமம் என்பதாக ஒருமுறை இல்லாவிட்டால இந்துமதம் என்று சொல்ல இடம் இல்லை...... எதை வணங்குபவனும், எதை வணங்காதவனும், ஒரு கடவுள் காரனும், பல கடவுள காரனும், தானே கடவுள் என்கிற சுமார்த்தனும, கடவுளே இல்லை என்கின்ற நிரீச்சுரவாதியும, சுவர்க்கம—நரகம், பாவம்-புண்ணியம் இல்லை என்கின்ற லோகாயதவாதியும்; எல்லாம் பொய் என்கின்ற மாயாவாதியும்; ஆண்-பெண் குறிகளே கடவுள் என்கின்ற சக்திவாதியும்; மற்றும்

தென்மொழியை நிறுத்தலாம்! தவறில்லை! தங்கள் முடிவு சரியே!

(**ஆசிரியர் குறிப்பு** :

எந்த ஒரு சிறு கருத்தையும், அஃது எவர் வாயிலிருந்து வந்தாலும் விட்டு விட்டுப் போகும் நோக்கம் எனக்கில்லை. எல்லாவற்றையும் துருவித் துருவி ஊடுருவிப் பார்த்து, நல்லது தேடும், உண்மையினை அறியும், அறிந்து வணங்கும் நோக்கமே என்னுள் மேலோங்கிக் கிடக்கின்றது. எனவே இந்தப் பகுதிக்கும் இதை மறுத்துவரும் அடுத்த மடல் பகுதிக்கும் வரும் அனைத்து மடல்களையும் அனைத்துக் கருத்துகளையுமே அவிழ்த்துப் போட்டுப் பிரித்துப் பார்க்கும் எண்ணத்துடன் எல்லாவற்றையுமே தென்மொழி அன்பர்களின் முன் வைக்க விரும்புகிறேன். அன்பர்கள் சுருக்கமாகத் தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கிறேன். — ஆசிரியர்.)

8. ஒருபக்கம் வாட்டம்; மறுபக்கம் மகிழ்ச்சி!

தோழருக்கு,

இனிய அன்புடன் — தென்மொழியில் நீங்கள் வாட்டத்தோடு எழுதியிருந்த ஆசிரியக் குறிப்பைப் படித்தேன். ஒருபக்கம் சிறிது வாட்டம்; மறுபக்கம் பெரிய மகிழ்ச்சி.

நடுத்தரப் பிரிவினரும் அந்தப் பிரிவை நோக்கி ஏறுகிற கீழ் நடுத்தரப் பிரிவினருமான படித்தவர்களின் மனப்பாங்கை விளங்கிக் கொள்ள உங்களுக்கு இவ்வளவு நாள் ஆகியிருக்கிறதே என்பது வாட்டம். இப்போதாயினும், இந்த 'இரப்பர்' மாந்தர்களைத் தெரிந்து கொண்டு, பணித் திசையில் தக்க மாறுதல் செய்து கொள்ள முன் வந்தீர்களே என்பதில் மகிழ்ச்சி.

(முன் பக்கத் தொடர்ச்சி)

மதத்தொடர்பாய் எந்தவகையான கொள்கை கொண்டவனும் எவனும் இந்துவே ஆவான்......... ஆகையால் இந்துக்கள் என்று அழைக்கப்படுகிற திராவிட மக்கள், இந்நாட்டின் நலங்கருதியும் பெரும்பாலான மக்களுக்குப் பிறவியின் காரணமாகவே சுமத்தப் பட்ட இழிவு ஒழிக்கப்படவேண்டும் என்பது கருதியும், முதலாவதாகச் செய்ய வேண்டிய வேலை—இந்துமதம் என்கின்ற புரட்டை விளக்கி, மக்களுக்குத் தெளிவை ஏற்படுத்தி, அந்தச் சிறையிலிருந்து வெளியேறும்படி செய்வதேயாகும்'. (9) (தொடரும்)

மாணவப் பருவத்திலேயே மக்கள்நல நாட்டம் உடையவனாக வளர்ந்துவிட்ட நான், இந்த நாட்டுப் படிப்பாளிகளான புதிய 'அய்ஸ்கிறீம் சாதியார்' அப்பட்டமான தன்னலக்காரர்கள் என்பதையும் அதை மீறி அவர்களால் செயற்படவே இயலாது என்பதையும் வெகு விரைவிலேயே உணரலானேன். அதன் காரணமாகவே, என்போல் பட்டங்கள் பெற்றவர்களிடையே உலவித் திரியாமல், இந்நாட்டுப் 'பாமர' எளியோரிடையே சென்று நின்றேன். நமக்குக் கற்றுத்தரப்பட்ட மதம், இலக்கியம், 'தத்துவம்' என்பன எல்லாம் வேறு, --இந்நாட்டின் முதுகெலும்பாக உள்ளவர்களின் மீது அவற்றின் பேரால் சுமத்தப்பட்டு வருபவை அடியோடு வேறு என்பதை உணர்ந்ததாலேயே, நம் மதங்களின் மீதும் சாமிகளின் மீதும் மட்டுமல்லாமல், நம் பழைய இலக்கியங்கள் என்பவற்றுள் பலவற்றின் மீதும் எனக்குக் கடுமையான சீற்றம். நீங்கள் இன்று ஏற்றாலும் ஏற்காவிட்டாலும், — நமது தமிழில் 'சங்க 'காலத்துக்கும புரட்சிக் 'கவிஞர்'காலத்துக்கும் இடைப்பட்ட காலத்தில் வளர்ந்து சடைத்த 'நீதிச் செய்யுள்,' 'பக்திப்' பாடல்' காவியங்கள்', சிற்றிலக்கியங்கள், நைபாண்டிப் பாட்டுகள் என்பன எல்லாம் இலக்கியங்களே அல்ல என்பது என் கருத்து. 'சங்க' இலக்கியத்துக்குப் பிறகு 'புரட்சிக் கவிஞா' ஒருவரே தமிழுக்கு இலக்கியம் படைத்தார் என்பது என் எண்ணம். ஆகவே, எளிய 'பாமர' உழைப்பாளி மக்களை எழுப்பி நிமிர்த்தத் தக்கவற்றையே இன்று நாம் நினைத்திட வேண்டும்; பேசிட வேண்டும்; செய்திட வேண்டும்.

நாம் பெரும் பல மூடங்களில் இருந்து விடுபடவேண்டியுள்ளது. அன்புகூர்ந்து சிந்தியுங்கள்.

அன்புள்ள,

முனைவர். சாலை இளந்திரையன், சென்னை-86.

9. முதலில் வருந்தினாலும் இறுதியில் மகிழ்ந்தேன்!

தகைசால் பெரியீர்,

வணக்கம்! தென்மொழி ஆசிரியவுரை கண்டேன். முதலில் மனம் மிக வருந்தினாலும் இறுதியில் மகிழ்ந்தேன். சொல்வதாலும், சொற்பொழிவாற்றுவதாலும், நூல்கள் பல எழுதுவதாலும் அடித்தள—ஏழை மக்களின் அறியாமையும் ஏழ்மையும் அகலும் என்பது பகற்கனவேயாகும். இவ்வமயத்தில் பெற்றார் மக்கள், 'அய்யா' என்று அன்புடன் அழைத்தால் உச்சி குளிராது; எண்ணெய் வைத்துத் தலையில் தேய்த்தால்தான் உச்சி குளிரும்,' என்று கூறுவது நினைவுக்கு வருகிறது. மேலும், சொல்லால் மட்டும் விளங்காதே செயலால் சீர்படு', என்ற பர். மு. வ. அவர்களின் உரையும் எந்த அளவுக்கு நடைமுறைக்கு ஏற்றதாக உள்ளது என்பதும் நினைவுக்கு வருகிறது. தமிழிலக்கியத்தில் குறள் உள்ளிட்ட அறநூல்கள் எத்தனையோ! ஆயின், பயன்? தங்களின்

தற்போதைய முடிவு சரியானதே! ஆய்ந்தாய்ந்து திட்டமிட்டுச் செயற்படுத்துங்கள். பலரும் பயன்பெற வழிவகுத்து, வளமாக வாழ வழியில்லையென்றாலும் வறுமை ஒழிய பல வழிகளிலும் தொலைநோக்குத் திட்டங்கள் நாளும் மலர ஆவன செய்யுங்கள். செயல்—திட்டமிட்ட செயல் நடைமுறைப்பட்டு நன்மைபயக் கட்டும். உண்மை அன்பன்.

— ந. சுப்பையா, தமிழாசிரியர், இலாடபுரம்.

10. வீணாக அலட்டிக் கொள்ளாதீர்கள்!

மானமிகு. பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கட்குத் தொண்டன் சண்முகம் வரையும் மடல்.

தாங்கள் 'தென்மொழி' இதழை மூடுவிழா செய்வது குறித்துப் பாராட்டி மகிழ்கிறேன். 'அடியே' என்பதற்கு மனைவி இல்லாத போது பிள்ளை பெயர் இராசரத்தினமா' என்பது பழமொழி. தினத்தந்தி படிப்பதற்கே தமிழன் இல்லாதபோது, 'தனித்தமிழ் இயக்கம்', தூயதமிழ் என்பவையெல்லாம் நடைமுறைக்கு ஒத்து வராதன என்பதை நான் நன்றாகப் புரிந்து கொண்டவன். நான் மெத்தப்படித்தவன் அல்லன்; புலமை பெற்றவனும் அல்லன், ஆனால் தமிழ்மொழி மீது நீங்காப் பற்றுக் கொண்டவன். நான் வீட்டில் கன்னட மொழிபேசுபவன். எழுதுவதும், படிப்பதும் தமிழே. எம்போன்றார்க்கு உள்ள தமிழ் உணர்வு தமிழர் என் போர்க்கும் இல்லையே, ஏன்?எல்லோரும், தாங்கள் எழுதியபடியே, தான் வாழவேண்டும், தன் மனைவி மக்கள் வாழவேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள்தாம் இன்று தமிழ் நாட்டில் இருக்கி றார்கள். ஆகவே நீங்கள் உடலை அலட்டி(அங்கலாய்த்து)க் கொள் வதில் பயனில்லை. — **த. மு. அ. சண்முகம்**, பள்ளிப்பாளையம்.

11. ஆண்டு இதழாக மாற்றிக் கொள்ளலாம்!

ஐயா, வணக்கம். 'தென்மொழியால் அறிவாளிகளையே உரு வாக்க முடிந்தது' என்று எழுதியுள்ளீர்கள். இதற்குத் தலையாய காரணியம் தென்மொழியை 'இலக்கிய இதழ்' என்ற நோக்கில் தொடங்கியதாக இருக்கலாம். எனினும் அதை ஒரேயடியாக நிறுத்திவிடத் தேவையில்லை; ஆண்டு இதழாக மாற்றிக் கொள்ளலாம். 'தமிழ்நிலம்' வெற்றிபெறப் பெரும் வாய்ப்புள்ளது. இதன் பக்கங்களை அதிகரித்து மேலும் பல செய்திகளை விரிவாக வெளியிடலாம். இந்த இதழ் எதிர்பார்த்த அளவுக்குத் தமிழின மக்களின் வாழ்வில் விழிப்புணர்வை ஏற்படுத் தும் என்பதில் ஐயமில்லை.

அன்புள்ள.

— **இராச. கூத்தன்**, பழனி.

12. மனம் வருந்துகிறது; ஆனால் முடிவு சரி!

அன்பார்ந்த தமிழ்நெஞ்சம், பாவலரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம். 'தென்மொழி'யில் கண்ட அதிர்ச்சி தரும் செய்தியின்

வினவே இம்மடல். தங்களின் துயரார்ந்த நெஞ்சத்தையும், எதிர்பார்ப்பின் ஏமாற்றத்தையும் தெளிவாக எடுத்துக் காட்டு கிறது, ஆசிரியவுரை.

'தென்மொழி' இல்லாத ஒரு நிலையினை எண்ணிப் பார்க்கவே என் மனம் அஞ்சுகிறது. அறிவார்ந்த ஒளிவிளக்கின் உதவியால் நடையிட்டுக் கொண்டிருந்த என் போன்ற உண்மைத் தமிழ் நெஞ்சங்களுக்கு அவ்வொளிக் குறைவால் ஏற்படும் அறிவு வளர்ச்சித் தடையினை, இழப்பினை ஆற்றுப்படுத்த முடியவில்லை.

எனினும், எந்த இலக்கு நோக்கி ஏவப்பட்டதோ அதன் முயற்சியில் பாதியளவே வெற்றிபெற்றுள்ளதைத் 'தென்மொழி' யைப் பொறுத்தவரை நாம் ஒப்புக்கொண்டுதான் ஆக வேண்டும். அதனை முறையாகத் தாங்கள் எதிர்பாராத ஏதுங் கெட்ட அறிவா ளித்தனங்களின் ஏமாற்றுதல்களைக் கூறினாலும், அது உண்மைதான் எனினும், அது ஏழை மக்களும் பங்கு கொள்ளும் அளவிற்கு எளிமையாகவும் இல்லையென்பதைக் கூறத்தான் வேண்டியுள்ளது.

'தென்மொழி'யைப் பொறுத்தவரை தாங்கள் கூறும் நாலாந் தர, ஐந்தாந்தர மக்களிடமிருந்து என்போலும் தனித்தமிழ் பேசு வோரை அது வேறுபடுத்தியே வைத்துள்ளது. கொள்கைகளை எவ்வளவுதான் எடுத்துரைத்தாலும் எளிமையின்மை ஒரு தடை யாகவே இருக்கின்றது.

எனவே, 'தென்மொழி' மூலம் ஏற்படுத்திவிட்ட தனித்தமிழ்க் கொள்கைப்பற்று, நடைமுறைப்படுத்தல், வளர்ப்பு நிலை ஆகியவை இனிப் போதும். ஒரு பகுதியாக வேண்டுமானால் வைத்துக்கொள்ள லாம். ஆனால், இனித் தாங்கள் செய்யவேண்டுவதெல்லாம், அந்த நாலாந்தர, ஐந்தாந்தர மக்களிடம் அறிவுநிலை வளர்ச்சி, கொள் கைப் பரிமாற்றமேயாகும். இனித் தங்களின் உரைகள் யாவும் அந்த ஏழை மக்களின் முன் நிகழ்த்துபவையாகவே இருக்க வேண்டும். அஃது எந்தச் சூழ்நிலையாகிலும் சரி.

இம்முடிவு தங்களின் அறிவார்ந்த நெஞ்சு, ஆழச் சிந்தித்த பின்பே நிகழ்ந்திருக்கும் என்பதையும் உணர்கிறேன். சரியான முடிவு என்பதே என் முடிவுமாகும். எனவே, உ. த. மு. க. வின் வளர்நிலைகளை வலிவுபடுத்துங்கள். மெத்தப்படித்தவர்களுக்கே அதன் பொறுப்புகள் என்பதைமாற்றி எழுதப்படிக்கத் தெரிந்தவர் களுக்கும் தாருங்கள். எதற்காக உ.த.மு.க.வோ அவ்வேழை மக்க ளோடு எப்படியெல்லாம் தொடர்பு கொள்ள முடியுமோ அப்படி யெல்லாம் தொடர்புகொள்ளுங்கள். எனவே, உ.த.மு.க. வின் ஊர்க்கிளைகளை விரிவுபடுத்துங்கள். செயல்களுக்கு அணியமா யுள்ளேன்.

— **இரா. நெஞ்சிற்கினியன்**, பச்சாபாளையம்.

மீண்டும் மறுஆய்வு செய்து நல்ல முடிவெடுங்கள்!

37. உண்மைகள் வெளிச்சத்திற்கு வருகின்றன!

பண்பார்ந்த பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம். 'தென்மொழி' கண்டேன் (சுவடி 19, ஓலை 5). தாங்கள் கூறியிருந்த முடிவு உண்மையிலேயே அதிர்ச்சி தருவதாகத்தான் இருந்தது. வருத்தமும் பெரிதடைந்தேன்.

கடந்துபோன நாட்களில் நடந்துபோன நிகழ்வுகளையும் சூழலையும் எண்ணும்போது பல உண்மைகள் வெளிச்சத்திற்கு வருகின்றன.

வெப்பம் எரிக்கும் பாலை நெடுவழியில் தொலைவில் தெரியும் தோற்றம் சோலைக்குளிர்ச்சிதான்—தொண்டை வறட்சி தீர்க்கும் சுவைநீர்ப் பொய்கைதான்—என்ற நம்பிக்கையைக் கொண்டு உடம்பிலுள்ள குருதியையெல்லாம் வெயர்வையாக வழிய விட்டபடி இறைக்க ஓடி இறுதியிலே எல்லாம் கானல்நீர் என்று கண்டு ஏமாறிப்போய்ப் பொய்த்தேரையின் முன் புலம்பி நிற்கும் தங்கள் துயரத்தில் நானும் பங்கு கொள்கிறேன்.

நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம். இது ஏன் தங்களுக்கு முன்பே தெரியவில்லை?

'தென்மொழி'யை நிறுத்தும் தங்கள் முடிவு திடுமென எதிர் பாராது வந்தாலும் அதற்காக நீங்கள் கூறிய உண்மைகள் எவை யும் புதியனவல்லவே! அவற்றை இன்றுதான் கண்டாற்போலச் சட்டென்று விழிப்படைந்து வேகம் கொண்டு கூறியதுதான் வியப் பாக இருந்தது.

கற்றோரும் உற்றோரும் கைகோத்து வந்தோரும் கன்னித்தமிழ் பயின்றவர்தாம்; கலையறிவு வாய்ந்தவர்தாம். நாவிலும் மூளையிலும் உறவாடும் தமிழ், நெஞ்சிலும் இருப்பது அரிதான ஒன்று போலும். பிறிதின் நோய் தன் நோய்போல் போற்றும் அந்தத் தமிழறிவு வாய்ந்த நெஞ்சங்கள் இல்லையே என்று வருந்திச் சொன்னீர்கள்.

பொதுமையான உண்மைதான் இது. கல்வியும், மொழிப்புல மையும் வளர வளர நாம் அடிமட்டத்திலுள்ள நல்குரவே தொல்வர வாய் நைந்து கிடப்போரிடமிருந்து விலகி விலகியேதான் சென்று கொண்டிருக்கின்றோம்.

இவர்கள் என்ன செய்துவிடப் போகிறார்கள், பார்க்கலாமே என்று உள்ளுக்குள் எள்ளலுடன நம்மைப் பார்த்து நிற்கும் உட்பகை வரும் வெளிப்பகைவரும் உவகையில் உள்ளம்பூத்து, அந்தக்களிப்பை மறைக்கக் கள்ளம் போர்த்து நிற்கிறார்கள்.

Scanned with CamScanner

முன்பு தனித்தமிழ்ப்பற்றுளர்களாக இனம் காப்போம் என ஏறுபோல் புறப்பாடு செய்தோரெல்லாம் இன்று என்ன சொல்கிறார்கள்? அந்தக் குறுகிய வட்டத்தை உடைத்துக்கொண்டு வெளியேறிப் பரந்த நோக்கில் மொழி இனத் தடைகளில்லாத எல்லையற்ற இலக்கிய வெளியில் மாந்தநேய உணர்வே கருவாகக் கொண்டு எழுதுவோம், பேசுவோம் என்கிறார்கள், கற்று வந்த மொழியையும் உற்றுவந்த மரபையும் சிதைத்து முனை மழுங்கிய கொச்சையும் உள்ளது கூறும் (Realism) பச்சையுமாய்ப் புதுப்பாப் புரட்சி செய்யப் புறப்பட்டிருக்கிறார்கள்.

உண்மையில், இலக்கிய வாணிகர்களாகிவிட்ட இவர்கள் உள்ளுக்குள் காசாசையும் மேல்மட்ட இலக்கியக்காரர்கள் வரிசையில் இடம்பெறும் புகழாசையும் கொண்டவர்கள் என்பது நமக்கெல்லாம் நன்றாகவே தெரிகிறது.

இஃது இவ்வாறிருக்க, தங்கள் பாசறையில் பயின்று, தமிழால் வளர்ந்து, வெளிப்போகாமல் தொடர்ந்து துணையிருக்கும் சிலர் போற்றுதற்குரியவர்களெனவே கருதுகின்றேன்.

நூற்றாண்டுகளாகக் குமுகாய அரசியல் சமய வல்லாண்மைப் போக்குகளால் ஒடுக்கியும் முடக்கியும் வைக்கப்பட்ட நம் தமிழர் கல்வி, பொருள், மொழியறிவு ஆகியவற்றின் ஒளியே படாமல் அறியாமையிருளிலும் மூளைச் சலவை போன்ற மயக்க நிலையிலும் அடிமட்டத்தில் வீழ்த்தப்பட்டுக் கிடக்கும் கொடுமையை நாம் உணர்ந்திருக்கின்றோமேயன்றி அவர்கள் மேம்பாட்டுக்கான நம் பணியை உருப்படியாக ஆக்கமுறையில் திட்டமிட்டுச் செய்தோமா?

தவறு எங்கே இருக்கிறது? நினைந்து பார்ப்போம்.

நமது தனித்தமிழ் முயற்சியும் இலக்கிய ஆக்கங்களும் அவர்களைச் சென்று சேர்கின்றனவா? சேர்ந்தாலும் அவர்கள் அவற்றை எவ்வாறு எடுத்துக் கொள்வார்கள்?

போதிய கல்வியும் மொழி இன உணர்வுகளும் இல்லாத அந்த ஏழை எளியோரிடம் எவை சென்று சேர்கின்றன?

மேடைப் பேச்சுகளும் திரைப்படக் களியாட்டங்களும், நாள் தோறும் கிழமைதோறும மலரும் தாள்கள், இதழ்கள் ஆகியவற்றில் இறைந்து கிடக்கும் அருவருப்புச் செய்திகளும படங்களும், வானொலி உரைகள், பாடல்கள் போன்றவையும், அல்லவோ அவர்கள் கண்டு கேட்டு மாந்திச் சுவைக்கும் கலை இலக்கிய உலகங்கள்! அவற்றோடு போட்டியிட நாம் முயற்சி செய்தோமா? வரப்பே தலையணையாய் வைக்கோலே பஞ்சுமெத்தையாய் வானமே கூரையாய் வாழும் அந்த இரக்கத்துக்குரியவர்களுக்கு நம் பாட்டின் பலன் போய்ச்சேர வேண்

டுமே என்று எண்ணி வருந்தி அதைத் துணிந்தும் வெளியிட்ட தங்கள் தலையாய தமிழ்நெஞ்சத்திற்கு என் தலை தாழ்ந்த வணக்கங்கள்.

அவர்களை எளிதில் அணுகுதற்கு ஏற்ற வழிகளான கதையும் கற்பனையும் வேண்டா என்றும கூறியிருக்கின்றீர்கள்.

உ.த.மு.க. அமைப்புக் கூட்டம் போன்றவற்றிற்குக் கற்றுயர்ந்த வாழ்க்கை வளம் கொண்ட அறிஞர்களே பெருமளவில் வாராத நிலை கண்டோம்.

கற்ற கல்வியாலும் மொழிப்படிப்பாலும் பெற்ற அறிவையெல்லாம் அவ்வப்போது சொறிந்து கொள்ளும் ஓர் அரிப்பாக மட்டும் கருதிப் பட்டிமன்றப், பாவரங்கம் போன்றவற்றில் உரக்கச் சொல்லாடி உயர்ந்த பேச்சாளராக வெளிச்சம் போட்டுக்கொள்ளும் சொல்வாணிகர்களாக மாறிவிட்ட 'புலவர்'களே கூடத் தங்கள் பேச்சைக் கேட்க வராதநிலையில். அவர்களது அரைத்த மாவை அரைக்கும் இதிகாசச் சொல் வீச்சுகளில் சொக்கிப் போய்க்கிடக்கும் ஏழை மாந்தர் எவ்வாறு வருவர்?

அவர்கள் நம்மிடம் வரவில்லையெனில் நாம் அவர்களிடம் போக வேண்டும் என்பது தானே நம் முன்னுல் தெரியும் ஒரே வழி!

எனது பணிவான எண்ணங்கள் சிலவற்றைத் தங்கள் திருமுன்னர் வைக்கின்றேன்.

1. **'தமிழ்நில'**த்தை வளமாக்கி விரிவாக்கி வளர்த்தல். அதை ஊர்தோறும் அமைக்கும் ஓர் அமைப்பின் வழி மக்களைக் கண்டு படித்துச் சொல்லல்.

2: நடைச் செலவு ஏற்பாடு செய்து மக்களைச் சந்தித்தல். ஆங்காங்கு 'மேடைப்பொழிவு' நிகழ்த்தல்.

3. தூய்மை கெடாமல் மொழியை இன்னும் எளிதாக்கி அனைத்து மக்களும் புரிந்து கொள்ளப் பேசுதல், எழுதுதல்.

4. இசையரங்கம், நாடகம் போன்ற கலைநிகழ்ச்சிகளின் வழி மக்களைத் திரட்டிக் கழகக் கருத்துகளைக் கூறல். பணிவுடன்,

— **மணிமொழியன்**, க.மு ,கல்.இ., வேடசெந்தூர்,
(கோவை மா. வ.)

38. முடுவிழாவிற்கு ஒரு முடுவிழா வையுங்கள்!

மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு, 'தமிழ்நிலம்' இதழ் எண் : 9-இல் 'ஓர் அதிர்ச்சி தரும் செய்தி' என்ற தலைப்பில் ஓர் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்ததைக் கண்ணுற்றதும், ஏதோ ஓர் இடி தமிழ்த் துடிப்புள்ளோரின் நெஞ்சங்களில விழப்போகிறதோ என்ற கிலி என்னுள் எழுந்தவண்ணமிருந்தது. அது உண்மையாகிவிட்டது.

ஆம், தென்மொழி சுவடி 19: ஓலை 5-இல் வெளிவந்த ஆசிரியவுரையைக் கண்டு உண்மையிலேயே உள்ளக் காய்ச்சல் கண்டது இன்னும் நிற்கவில்லை. தாங்கள் கூறும் கருத்துகள் யாவும் ஏற்புடையனவென்றாலும், அதற்காகத் தாங்கள் ஆற்றிவரும் 25-ஆண்டுத் தென்மொழித் தமிழ்த் தொண்டை நிறுத்த எப்படி ஐயா மனம் வந்தது! இது நயன்மையும் ஆகாது; என்னுள்ளம் ஏற்காது.

தாங்கள் கூறும் கரணியங்களை ஏற்றாலும், அதற்காகத் தமிழ உள்ளங்களில் தவழ்ந்து வரும் தென்மொழித் தமிழையும், தமிழ்ப் பறவையாக வட்டமிடும் தமிழ்ச்சிட்டையும் இடுப்பை ஒடித்துத் தடை செய்வதும், 'மூடுவிழா' அறிவிப்பு வெளியிடுவதும் நல்லதன்று.

'தமிழ்நிலத்தில்' அதிகமான மாற்றங்கள் வந்தால்தான், அது ஏழை எளிய, அனாருடம் வாழ்ந்துவரும மக்களுக்குப் போய்ச்சேரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. அதற்காக 'மூடுவிழா' தேவையில்லை. **அதற்காக 25-ஆண்டு வளர்த்த குழந்தையைக் கொன்றுவிடுவது எவ்வகையில் நயன்மையாகும்?** 'தமிழ்நில'த்தின் வாயிலாகத் தான் தமிழர்களைத் தட்டி எழுப்ப முடியும்; தமிழின உணர்வுகளை எழுச்சி பெறச் செய்ய முடியும்; உண்மைத் தமிழர்களை உருவாக்க முடியும்; மறுக்க முடியாது. அதற்காக மூடுவிழாவிற்கு விரைவு தேவையில்லை. 'பெற்ற மனம் பித்து' என்பார்கள்; அதுபோல் அல்லவா உங்கள் உள்ளம் செயல்படுகிறது.

மற்றவர்களுடைய கருத்து, செய்திகளுக்குத் தென்மொழி, தமிழ்ச்சிட்டில் இடம் தந்து, ஒதுங்கிக் கொண்டு, செயல்படலாம். மேற்பார்வையைத் தாங்கள் பார்த்துக் கொள்ளலாம். 'தமிழ் நில'த்தில் தாங்கள் முழுக் கவனம் செலுத்தித் தங்கள் குறிக்கோளை நிறைவுபெறச் செய்யலாம் என்பது என் எண்ணம்.

தாங்கள் இந்தத் தமிழ் நெஞ்சங்களை உங்கள் உள்ளத்திலே நினைத்து, எண்ணி, 'மூடு விழா'விற்கு ஒரு 'மூடுவிழா' வைத்து விட்டுத் தொடர்ந்து தென்மொழி, தமிழ்ச்சிட்டை வெளியிடுமாறு தங்களை மிகவும் பணிவுடன் இரு கை கூப்பி வேண்டுகிறேன். அடுத்த தென்மொழி இதழில் என் கருத்துக்குச் சார்பான கருத்தை வெளியிடுவீர்கள் என்று நம்பிக் காத்திருக்கும், அன்புள்ளம்.

— **சே. மெய்யிறைவன்**, முதலிப்பட்டி.

39. என்னைப் படையலாக்கிக் கொள்ளுவேன்!

அன்பார்ந்த ஐயா அவர்களுக்கு, அன்பு வணக்கங்கள். நான் கடந்த இரண்டாண்டுகளாகத்தான் 'தென்மொழி' படித்து வருகின்றேன். தனித்தமிழ் இயக்கத்தின் முதற்படியாக ஐயா அவர்கள் இருபத்தைந்தாண்டுகளுக்கு முன்னர் 'தென்மொழி' இதழினைத் தொடங்கிப் பல இடையூறுகளையும், இன்னல்களையும், வரவேற்று இன்று தமிழ் நெஞ்சங்கள் கைகளில் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் மூன்றும் தவழ்கின்ற இவ்வேளையில்,

'தென்மொழி' இதழ் படிப்படியாக நிறுத்தப்பெறும் என்ற 'அறிவிப்பு'க் கண்டு மிகவும் துன்பப்பட்டேன். இந்த இரண்டாண்டுகளில்தான் என்னையே ஒரு தமிழனாக, தமிழ் இனத்தொண்டனாக. தமிழ்நிலக் காவலனாக இனம் கண்டு, இத் தமிழ்க் குமுகாயத்திற்கு என்னால் ஆற்ற முடிந்த செயற்பாடுகளைச் செயல் படுத்த—காலமெல்லாம் தொண்டாற்றவிழைந்துள்ளேன். எனவே, 'தென்மொழி' நிறுத்தப்படுதலை மறுஆய்வு செய்யுமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

இருந்தபோதும், அதற்கீடாக உ.த மு.க. மற்றும் 'தமிழ்நிலம்' வடிவுபடுத்தப்பெறும் என்ற கருத்து என் புண்பட்ட உள்ளத்திற்கு அருமருந்தாக உள்ளது. ஐயா அவர்களின் மன உணர்வுகளை என்னால் நடுநிலைமையிலிருந்து புரிந்து கொள்ள முடிகின்றது.

ஆகவே, ஐயா அவர்கள் உ.த.மு.க. இயக்கமும், தமிழ்நிலமும் வலிவுபெற எடுக்கின்ற எவ்வகை முடிவிற்கும் என் முழு ஒத்துழைப்பினை நல்கிடவும், ஐயா அவர்கள் பணித்தால் நான் பணி புரிந்து வருகின்ற 'வேலை'யினை விட்டுவிட்டுத் தமிழ்க் குமுகாய மேம்பாட்டிலும், தமிழின வளர்ச்சியிலும் என்னைப் படையலாக்கிக் கொள்ள விருப்பமாக இருக்கிறேன். என்னால் முடிந்தளவு பொருள் உதவியும் செய்திடவும் விருப்பமாக உள்ளேன் என்பதனையும் ஐயா அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

— **ப க. அன்பின்பன்**, சேலம்-30.

40. பழைய கதைதான் தொடரும்!

தமிழின் இனிய ஐயா பாவலரேறு அவர்களுக்கு வணக்கம். நலம். நலமே விளைக.

'என் தொண்டியக்கத்தில் சில மாறுதல்கள்' என்ற ஆசிரிய உரை கண்டு வியப்படைந்தேன்; பின் தெளிவு பெற்றேன். தங்களின் உள்ளத்து உணர்வுகளைத் தெள்ளத் தெளிவாகத் திரையிட்டுக் காட்டியுள்ளீர்கள்.

தங்களின் கருத்துகள் குமுகாயத்தின் அடித்தளத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்குப் போய்ச்சேரவில்லை, செயலாக மலரவில்லை என்பது முற்றிலும் உண்மையே!

தென்மொழியை நிறுத்திவிட்டுத் தமிழ்நிலத்தையும் உ.த.மு.க.வையும் வலிவு படுத்தினாலும் முன்பு களத்தில் இருந்தவர்கள்தாம்-இருப்பவர்கள்தாம் — இனியும் இருப்பார்கள். இனியும் இவர்களையே நம்பித்தான் மேலும் நீங்கள் களத்தில் இறங்குகிறீர்கள்; இயங்குவீர்கள்.

இதனால் எவ்வாறு பெரிய மாறுதல்—விளைவு ஏற்படப் போகிறது? சற்றே எண்ணிப்பாருங்கள்.

'பழைய கதைதான்' தொடரும். பொறுத்திருந்து பார்ப்போம்.

'எண்ணித் துணிக கருமம்' துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு.'

நா. தமிழவேள், பழங்கரை.

41. தென்மொழி நின்றால் அன்பர்கள் தாங்கிக் கொள்ள மாட்டார்கள்!

பெருமதிப்புக்குரிய பாவலரேறு ஐயா, வணக்கம். உங்கள் ஆசிரியவுரை கண்டு அதிர்ச்சியடைந்தேன். இவ்வுரையினூடே, தங்களிடம் மேலோங்கி நிற்கும் உணர்வெழுச்சி சரியானதுதானா என்பதைத் தாங்கள் தன்னாய்வு செய்துபார்க்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

'தென்மொழி உருவாக்கிய அறிவாளிகளில் எவரும், ஏழை எளிய மக்களுக்குத் தங்களால் இயன்ற ஏதாமோர் இனநலத் தொண்டைச் செய்ய முன்வரவில்லையே, ஏன்?' என்று கேட்கிறீர்கள். செய்துகொண்டுதான் இருக்கிறோம். குறிப்பிடத்தக்க பயன் எதுவும் இதுகாறும் விளைந்திடவில்லை. என்பதுதான் உண்மைநிலை இருபத்தைந்து ஆண்டுகளாக வெளிவந்து கொண்டிருக்கும் 'தென்மொழி' இதழ் கண்டுள்ள வளர்ச்சி, மூவாயிரம் படிகள் மட்டுமே விற்கப் படுகின்ற வளர்ச்சிதானே? ஏன் இன்னும் ஏழை எளிய மக்களுக்கு இவ்விதழ் எட்டவில்லை? கற்றோரிடையே கூட இன்னும் ஒரு விழுக்காடுதானும் தென்மொழி சென்று சேரவில்லையே, ஏன்?

மாலைமுரசு, தினத்தந்தி போன்ற நாளிதழ்கள், குமுதம், ஆனந்தவிகடன் போன்ற கிழமை இதழ்கள்தாம் ஏழை எளியவர்களையும் எட்டுகின்றன. ஏன் என்பது கூறுமலே அமையும். தனித்தமிழ் நடை ஏழை எளியவரை எட்ட வேண்டுமென்றால், பத்துத் தலைமுறைகளேனும் தென்மொழி தொடர்நடையிடவேண்டும் என்பதை மறுக்க முடியுமா?

தாங்கள் அமைத்துள்ள களத்தில் தென்மொழி அன்பர்கள் ஏன் சேரத் தயங்குகிறார்கள் என்பது புரியாத புதிரன்று. தாங்கள் அமைத்துள்ள உ.த.மு.க. இயக்கம் எண்ணித் துணிந்த கருமமாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதே பலருடைய தயக்கத்துக்குக் காரணம். தமிழக விடுதலைதான் நம் முழு மூச்சு. நோக்கம், கொள்கை, முயற்சி என்கிறீர்கள். இஃது இன்றைய தமிழகத்தில், எள்ளின் மூக்கத்துணையும் நடைமுறைக்கு உகந்த, இயல்கின்ற செயல் அன்று என்பதை ஈராண்டுகளுக்கு முன்னரே தங்களுக்குக் கடிதம் வழி தெரிவித்தேன். அக்கடிதமும் தென்மொழியில் வெளியிடப்பட்டது. தமிழ், தமிழ்நாடு என்ற உணர்வுள்ளோர் என்று கணக்கிட்டால், இற்றைத் தமிழகத்தில், 0.0001 விழுக்காடுகூடத் தேராது என்பது வெள்ளிடைமலை. தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள், இசுலாமியர்கள், கிறித்தவர்கள்—இவர்களெல்லாம் தனித்தமிழ்நாடு என்பதை நினைத்தும் பார்த்திட விரும்பாதவர்கள். தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களில் பெரும்பான்மையோர் ஏழை எளியவர்களாக, வறுமைக் கோட்டுக்கு மிகவும் கீழே இழிந்து கிடப்பவர்களாகவே இருக்கக் காண்கிறோம்.

Scanned with CamScanner

இவர்களுக்கு வேண்டுவவெல்லாம், உணவு, உடை, குடில்தான். இவை கிடைக்காத நிலையிலுள்ள இவர்களிடம் சென்று, தமிழ், தமிழ்நாடு என்று பேசினால், நாமெல்லாரும் எள்ளி நகையாடப் படுவதன்றி விளைபயன் வேறு யாதாக இருக்கும்? ஆகவே, உ. த.மு.க. இயக்கம், இன்றைய நிலையில் செயத்தக்க செயல் அன்று என்பதைத் தாங்கள் கருதிப்பார்க்க மறுத்துவிட்டுத்தான், களம் அமைத்தீர்கள். ஆகவே செயன்மைத் திறமறிந்தவர்கள், களத்தில் இறங்கத் தயங்கு கிறார்கள்.

இந்நிலையில் வெளிப்படையாகக் கூறிவிடுதல் செயத்தக்க செயல் என்பதால் கூறுவேன், பாவலரேறு அவர்களே, மற்றவர் கருத்துகளையோ, உணர்வுகளையோ ஒரு பொருட்டாக மதித்துக் கருதிப் பார்க்கவும் தாங்கள் மறுக்கிறீர்கள். தன்முனைப்பாகவே ஒவ்வொன்றையும் செய்பவராக இருக்கிறீர்கள். இந்த இயல்பு, ஓரியக்கத் தலைவருக்கு இருக்கக் கூடாத ஒன்று. அறிஞர் அண்ணா வின் வெற்றிக்குரிய முகாமைக் கூறுபாடு, அவர் தம்முடன் இணைந்து செயல்பட்டவர்களின் கருத்துகளையே சில முகாமையான பொழுதுகளில் தம் சொந்தக் கருத்துகளாக ஏற்றுக்கொண்டு செயல் பட்ட பாங்கு எனலாம். தம்முடன் இணைந்து நின்றவர் ஒவ்வொரு வரும் தத்தம் திறமையால் உயர்ந்திடவே அவர் ஊக்குவிப்பவரானார். இந்தக் கூறுபாடு ஒரு தலைவனுக்கு இன்றியமையாதது என்றால், இதில் தாங்கள் மிகவும் பின்தங்கி விடுகிறீர்கள் என்பதே கசப்பான உண்மையாய் நிற்கிறது.

தென்மொழி, பல தமிழுள்ளங்களை உருவாக்கியும், தமிழ் நெஞ் சங்கள் பலவற்றுக்கு ஆறுதல் அளித்தும், தனித்தமிழ்ப் பற்றாளர் களைப் பெருக்கியும் வருகிறது. இருபத்தைந்து ஆண்டுக் காலத் தென்மொழி இயக்கம் பயனற்றுப் போய்விடவில்லை. எதிர்பார்க்கும் அளவு பயன் கிட்டுவதற்கு ஆண்டு பலவாகும். ஆற்றாமை வேண் டாம்; விரைவுப்படவும் வேண்டாம்.

தென்மொழியால் பயனடைந்தவர்கள், ஆளுக்கோர் இதழ், மேடைப் பேச்சுகள், தமிழுக்கு ஆக்கம் சேர்க்கும் நூல்கள் என்று அவரவர் அளவில் இயங்கி வருகிறார்கள் என்றால், அதைக் கண்டு, ஒரு தந்தையின் இடத்திலிருக்கும் தென்மொழி, கழிபேருவகை கொள்ள வேண்டாமா? அவலச் சுவைக்கு இங்கு இடமேது?

பாவலரேறு அவர்களே, தென்மொழியைத் தாங்கள் நிறுத்தி னால், தென்மொழியன்பர்கள் அச்செயலைத் தாங்கிக் கொள்ளமாட் டார்கள்.

"கைம்மாறு வேண்டாக் கடப்பாடு" —
வாழ்க வள்ளுவம், தொடர்க தென்மொழி இயக்கம்.

தென்மொழியன்பன்,
— க.சி. அகமுடைநம்பி, அருப்புக்கோட்டை.

சமசுக்கிருதம் தமிழர்களால் உருவாக்கப்பட்ட மொழியா?

வழக்கறிஞர் — ப. பத்மநாமன், க.மு., ச.இ.

கடந்த 3-9-1991-ஆம் பக்கல் 'குமுத'த்தில் பகீரதன் விடையளித்துள்ளார். அது மட்டுமா? மேலும் பல கேள்விகளுக்கும் இடமளிக்கிறார். வீரமா முனிவர் பற்றி எல்வளவு வேண்டுமானாலும் வீரத்துடன் பேசட்டும், கேட்டுச் சுவைக்கலாம். ஆனால் அவர் "தொல்காப்பியத்தின் சில மெய்ம்மங்களின் நுட்பங்களை விளக்கித் தமிழ் அறிஞர்கள் தாங்கள் புதிதாக உருவாக்கிய வடமொழியில் — அஃதாவது சமசுக்கிருதத்தில் — எழுதியது ரிக்வேதம். இது ரிக்வேதத்தை நுட்பமாக ஆழ்ந்து ஆய்ந்த திரு. சுந்தரராசனின் முடிவாகும். பல சமசுக்கிருத அறிஞர்கள் ஒப்புக் கொண்ட முடிவும் ஆகும்" என்று விளக்குகிறாரே, அதை எளிதில் செரிக்க முடியவில்லை.

காரணம், மொழி என்றால் என்ன என்று வரையறுத்து, மொழியின் தொடக்கம், வளர்ச்சி, உலக மொழிகளின் எண்ணிக்கை, அவற்றை இனம் பிரித்தல் -- ஆகிய பின்னணியில் தமிழ், சமசுக்கிருதம் ஆகிய இரண்டின் தொன்மை, தனித்தன்மை பற்றி பர்.எசு. சந்திரசேகரர் என்பவர் சென்னை "இந்து" செய்தி நாளேட்டில் ஒரு முழுப்பக்க அளவில் எழுதிய ஆய்வுக் கட்டுரையில் ரிக் வேதம் பற்றிக் குறிப்பிடுவதெல்லாம் 'ரிக் வேதத்தில் திராவிட மொழிகளின் சில சிறப்பு இயல்புகள் காணப்படுவதால் அம்மொழிகள் தென் இந்தியாவில் மட்டும் பேசப்படவில்லை; வட இந்தியாவிலும் பரவலாகப் பேசப்பட்டிருக்கலாம் என ஒப்பப் படுகின்றது" என்பது மட்டும்தான். (It is BELIEVED that the Dravidian Languages were not spoken just in South India as now, but may have been widespread in Northern India as well, for certain features of the Dravidian languages are found in the Rig Veda"- THE HINDU dated 28-12-1980, page 19, 'ANTIQUITY of TAMIL' by Dr.S. Chandrasekar.)

எனவே ரிக்வேதத்தை மட்டும் வைத்து எப்படித் தமிழ் அறிஞர்கள் தாம் ரிக்வேதத்தையே எழுதினார்கள் என்றும், அதுவும் தாங்கள் புதிதாக உருவாக்கிய ஒரு வடமொழியில்-அஃதாவது சமசுக்கிருதத்தில்-எழுதினார்கள் என்றும், இது பல சமசுக்கிருத அறிஞர்கள் ஒப்புக்கொண்ட முடிவு ஆகும் என்றும் திரு பகீரதன் உறுதியாகக் கூற முடியும்? தொன்மை மிக்க தம் மொழி ஒன்றிற்கே, தமிழுக்கே, சொந்தக்காரர்கள் ஆன தமிழ் அறிஞர்கள் ஏன் வேறு ஒரு "வடு + அல் + மொழி"யை உருவாக்கினார்கள். தமிழில் குறை கண்டிருந்தாலும், தமிழைத்தான் "வடு + அல் + மொழி"யாக ஆக்கியிருக்க வேண்டும்! தொல்காப்பியம் தமிழ்

இலக்கண நூல். அதன் எந்த மெய்ம்மத்தை விளக்கத் தமிழ் அறிஞர்கள் விரும்பியிருந்தாலும் அதைத் தமிழில் எழுதியிருக்க விரும்பியிருப்பார்கள் என்பதுதான் இயல்பும், இயற்கையும், ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்துமாகும். ஆனால் தமிழ் இலக்கணத் தொன்மை நூல் ஒன்றின் சில மெய்ம்ம நுட்பங்களை விளக்கத் தனி ஓர் "ஓசைக் குற்றமில்லா' மொழியையே தமிழ் அறிஞர்கள்-அம் மொழி மக்களுக்குத் தெரியாவிட்டாலும தாழ்வில்லையா?-உருவாக்கி ரிக் வேதத்தை எழுதினார்கள் 'என்பது இயல்புக்கும், இயற்கைக்கும் நேர் எதிரானது. நம்ப முடியாதது-திரு. பகீரதன் நம்பும்படியான மேலும் சில விளக்கங்களை அளிக்கும வரை!. தமிழின் தனித் தன்மையில், அதன் தொன்மையில் பற்றும் நம்பிக்கையும், பெருமை யும் கொண்ட என் போன்றோருக்கு மேலும் சிறிது விளக்கங்களை 'வடு + அல் + மொழி' பற்றித் திரு. பகீரதன் கூறுவாரா? "தொல் காப்பியத்தை இயற்றியவர் தொல்காப்பியர் என்ற இயற்பெயர் உடையவர் அல்லர், அவரது பெயர் அகத்தியர் என்பது தமிழின் தொன்மையை ஆராய்ந்த ஆய்வாளர்களின் முடிவு'' எனப் பகீரதன் கூறியுள்ளார். ஆனால் கடந்த 31-8-81ஆம் நாள் பம்பாய் சண்முகானந்தா அரங்கில் அங்குள்ள தமிழ்ப் பேரவையின் ஆண்டு விழாவில் உரையாற்றிய கலைஞர் கருணாநிதி அவர்கள் 'இன்றைய தமிழகத்துடைய குமரிமாவட்டத்திலே பிறந்த அதங் கோட்டு ஆசானுடைய மாணவர் தொல்காப்பியர்'' எனக்கூறி யுள்ளார். இதுபற்றித் திரு. பகீரதன் ஏதாவது கூற விரும்புகிறாரா?

தவிர, சமசுக்கிருத மொழி தமிழ் மக்களால் செய்யப்பட்டது என்ற உண்மையை சான்றுடன் விளங்கிக் கொண்டிருக்கும் பா. தேசாமூர்த்தியைப் பாராட்டும் திரு. பகீரதனின் கவனத்திற்குப் பர்.எசு. சந்திரசேகரர் தமது ஆய்வுக் கட்டுரையில் சமசுக்கிருத மொழி பற்றிக் கூறியுள்ள கருத்துகளையும் கொண்டுவர விரும்பு கிறேன்: "Aryans who immigrated to India sometime between 3000-2000 B.C. BROUGHT Sanskrit, THEIR MOTHER TONGUE. The word Sanskrit literally means the language oft he cultured or refined; the petfecred. Sanskrit is the earliest Indo-European !anguage for which we have any record. (It is followed by Greek and Latin) Sanskrit is not only the most ancient literary classical language, it is also the language of the Hindu religion. The ancient form Sanskrit is called Vedic Sanskrit, because the early Vedas, of the Hindu scriptures, were written in it. This 'sacred Sanskrit" gradually became "classical Sanskrit". And this eventually became Prakrit (common or natural or unpolished language) and later proliferated into Middle Indian languages. These in the course of several centuries evolved into the modern Indian languages''.

சமசுக்கிருதம் என்றால் பண்புடைய அல்லது நாகரிக முதிர்ச்சி யுடைய மக்களின் மொழி (language of the cultured or refined, the perfected) என்று பொருள்படுவதாக ஆய்வுக் கட்டுரையாளர் விளக்கியுள்ளார். சமசுக்கிருதம் இன்றைக்கு ஏறத்தாழ 4000-5000 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவிற்கு வந்து குடியேறிய ஆரியர் களால் கொண்டுவரப்பட்ட அவர்களின் தாய்மொழி எனறும் கூறுகிறார் பர். சந்திரசேகரர். அப்படி என்றால், திரு. பகீரதன் வடமொழி என்பதை ஏன் "வடு + அல் + மொழி" எனப் பிரித்து "ஓசைக்குற்றம் இல்லாத மொழி" எனப்பொருள் விளக்கமும் கொடுத்து "வடல் மொழி காலத்தால் வடமொழி ஆகத் திரிந்தது. இது விளங்காமல் வடமொழி என்றால் வடக்கே இருந்து வந்த மொழி என்று தமிழ் மரபு தெரியாத தமிழ்ப் புலவர்கள் இன்றும் சொல்லி மொழி வேற்றுமையை வளர்த்து வளர்கிறார்கள்" என்று சாடவும் செய்கிறார்!

பர். சந்திரசேகரர் கருத்துப்படி சமசுக்கிருதம் ஆரியர்களால் கொண்டுவரப்பட்ட அவர்களின் தாய்மொழி என்றால், வடமொழி என்பது வடக்கேயிருந்து வந்தவர்களின் மொழி என்பதைத்தானே சரியாகக் குறிக்கின்றது? ஆரியர்களின் குடியேற்றத்தையே திரு. பகீரதன் மறுத்தால்தான், அவரது "வடு + அல் + மொழி" என்ற பொருளை ஏற்க ஒரு சூழல் எழும். அவ்வாறு அவர் செய்ய முடியுமா?

மேலும், 14-10-1980 "இந்து" செய்தி ஏட்டில், ஆசிரிய ருக்குக் கடிதங்கள் பகுதியில், ஒரு வாசகர் தமிழில் கோவிலில் இறை வழிபாட்டுச் சொற்களை (மந்திரங்களைக்) கூறினால், கோவிலின் புனிதம் நீங்கிக் களங்கம் பட்டுவிடும், அதனைப் போக்கப் புனிதப் படுத்தும் சடங்குகள் (purificatory ceremonies) செய்யவேண்டும் என்று எழுதியுள்ளார். தமிழைக் கோவிலில் பயன்படுத்தக் கூடாது என்று மீமிசை (சுப்ரீம்) வழக்குமன்றத்தில் தடை உத்திரவு பெற்றுள்ளார்கள். தமிழ் "தீட்டு" மொழி என்ற கருத்து இன்னும் உள்ளது. தங்களின் சொந்தத் தாய் மொழியையே "தீட்டு" மொழியாக்கும் அளவிற்குத் தமிழைக் கோயில்களில் இறை வழிபாடு செய்யத் தகுதியற்றதாக்கும் அளவிற்குத் திரு. பகீரதன் குறிப்பிடும் தமிழ் அறிஞர்கள்-அவர்கள் எந்தக் காலக் கட்டத்தைச் சேர்ந்தவர்களாயினும் சரி-ஏன் ஒரு "வடு + அல் + மொழி"யை உருவாக்கினார்கள்? அப்படியே அவர்கள் தமிழ் அறிஞர்களாக இருந்திருந்தாலும், அவர்கள் தமிழர்களாக இருந்திருக்க முடியாது! ஏனெனில், தங்கள் சொந்தத் தாய்மொழியையே தகுதியற்றதாக்கும், -"தீட்டு" மொழியாக்கும் அளவிற்குத் தமிழர்கள் வேறு ஒரு "வடு + அல் + மொழி"யை-"ஓசைக் குற்றமில்லாத" வேறு ஒரு மொழியை-உருவாக்கியே இருக்க முடியாது. ஆகவே சமசுக்

கிருதம் வடக்கே இருந்து வந்த மொழி அன்று; ஆரியர்களின் தாய்மொழியும் அன்று; தமிழ் அறிஞர்களால் புதிதாக உருவாக்கப்பட்ட மொழி என்று ஏற்றுக்கொண்டால்கூட, அது "தமிழ் மக்களால் செய்யப்பட்டது" என்று ஏற்கவே முடியாது. அவ்வாறு செய்தால் அல்லது நம்பினால் தமிழர்கள் தங்களின் தொன்மை மொழிக்குத் தாங்களே இழிவு தேடுவதாகும். தமிழின் தொன்மை பற்றிக் கூறும், தமிழ் மரபு பற்றிக் கூறும் திரு. பகீரதன் இது பற்றி என்ன கூற விரும்புகிறார்? தமிழ் 'தீட்டு' மொழிதானா? ஒரு 'வடு + அல் + மொழி'யை உருவாக்கித் தங்கள் மொழியைத் தாங்களே தமிழர்கள் தாழ்த்திக் கொண்டார்களா?

திரு. பகீரதனோ, திரு. சுந்தரராசனோ, திரு. தேசாமூர்த்தியோ, அல்லது பகீரதன் குறிப்பிடும் சமசுக்கிருத அறிஞர்களில் சமசுக்கிருதம் எனும் வடு + அல் + மொழியைத் தமிழ் அறிஞர்கள் தாம் உருவாக்கினார்கள் என்ற முடிவை ஒப்புக்கொண்டுள்ள அந்தச் சமசுக்கிருத அறிஞர்களில்—யாராவது ஒருவரோ மேலுள்ள கேள்விகளுக்கு விடைகளும், விளக்கங்களும், நம்ப வைக்கும் சான்றுகளுடன் தருவார்களா? தாய்மொழி, தமிழினத் தொன்மையையும் அதன் தற்காலத் தகுதியையும் ஐயமற அறியவே கேள்விகளைக் கேட்டுள்ளேன். ○

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம் :	8 ,,	18 ,,	18 ,,
தனியிதழ் :	1-25 ,,	3 ,,	3 ,,

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

'தமிழ் நிலம்'

கிழமை இதழ்—சென்னை-5.

1.	தனியிதழ்	விலை உரு. 0.65
2.	ஆண்டுக் கட்டணம்	உரு. 36.00
3.	அரையாண்டுக் கட்டணம்	உரு. 18.00

ஓரிதழுக்கு உரு. 4.00 மேனி முன் பணம் கட்டும் முகவர்கள் எழுதிக் கேட்க.

தொடர்புக்கு : **தமிழ் நிலம்**, 5, அருணாசலத்தெரு. சென்னை-5.

குலவுணர்வைத் தடுப்போம்:
தமிழுணர்வை வளர்ப்போம்!

['ஓ! இரசிக்கும் சீமானே வா" — என்னும் (பராசக்தி)
திரைப்பட இசை]

(எடுப்பு)

ஓ! துடிக்கும் தமிழா, வா!
கெடுக்கும் குலவுணர்வைத்
தடுக்கும் வழிகளறிவோம்—உயிர்
வளர்க்கும் தமிழுணர்வை
உழைக்கும் நம்மவர்க்கு
விளக்கும் பெருமை பெறுவோம். (உயிர்)... ஓ

(தொடுப்பு)

கற்றொழிலும் பொற்றொழிலும் ஒன்று—அவை
கற்றவரை வேறுசெய்து கொண்டு—வீண்
கட்டுரையெல் லாம்புகன்று
மட்டமுயர் வோதிக் கொண்டு
முட்டிக்கொள்ள லாமோ தலையை— (உயிர்)

ஆரியர்கள் கூறியதைக் கேட்டு—மக்கள்
ஆறறிவ டகுவைத்தார் நேற்று—இன்னும்
பூரியரைப் போல்முரணி
ஓரினத்துள் ளேபொருது
வேருடனே வீழவேண்டாம்— ஓ!

பேசுமொழி யேஉயிர்கள் கூட்டும்—மன
மாசுகளை நீடுதொலை வோட்டும்—ஒளி
வீசறிவு நாடிடவும்
காசுபணம் தேடிடவும்
பேசுமொழி தான்உதவும்— ஓ!

யார்நீவிர் என்றொருவர் கேட்டால்
சீனர்என்று சொல்லிடுவார் சீனர்—வங்
காளிஎன்று சொல்லுவார்வங் காளி—ஆனால்
கள்ளரென்றும் பள்ளரென்றும்
பிள்ளைசெட்டி நாடாரென்றும்
சொல்லுகின்றார் பண்டைத்தமிழர்—ஓ!

— க. அன்பழகன்.

இந்திராகாந்திக்கு ஒரு மடல்!

— இராசு. கார்த்திகேயன்

மதிப்பிற்குரிய தலைமையமைச்சர் அவர்கட்கு,

வணக்கம். தாங்கள் 8-4-83 அன்று காசியில் பேராயக்கட்சி ஊழியர்கள் கூட்டத்தில் பேசும்போது 'இந்தித் திணிப்புப்' பற்றிச் சில கருத்துகள் தெரிவித்துள்ளதாக 'இந்து' 9-4-83 நாளிதழ் தெரிவிக்கிறது. எனவே, தங்கள் ஐயங்களைத் தெளிவிப்பதற்காக இம் மடல் வரையப்பெறுகிறது.

1. தென் மாநிலங்களின் மீது இந்தி திணிக்கப்படுகிறது என்ற குற்றச்சாட்டு 'அடிப்படையற்றது' (baseless) என்று கூறியுள்ளீர்கள். இக்குற்றச்சாட்டுக்கு அடிப்படை அரசியற் சட்டத்தின் 343 (1) பிரிவேயாகும். இந்தியை ஆட்சி மொழி என்று தாங்கள் சட்டமியற்றி வைத்துக் கொண்டுள்ளதைத்தான் 'இந்தித் திணிப்பு' என்று நாங்கள் கூறுகிறோம். இந்தியை அதற்குத் தகுதியில்லாத அரியணையிலிருந்து இறக்கிவிட்டீர்களாயின், இந்தி திணிக்கப்படவில்லை என்று நாங்கள் நம்ப இயலும்.

2. இந்தி திணிக்கப்படுவதாகக் கருத்துகளைப் பரப்புவதையே குறியாகக் கொண்டுள்ள சிலர் அரசியல் ஊதியத்திற்காக, இப்பொருள் பற்றி அவ்வப்போது குரலெழுப்பிக் கொண்டுள்ளனர் என்று கூறியுள்ளீர்கள். (The issue was being raised off and on by vested interests for political gains".)

இது தவறு. தமிழக மக்களுக்கு இந்த ஒரு சிக்கலைப்பற்றி மட்டும்தான் ஓரளவு விழிப்புணர்வு உள்ளது. இவ் விழிப்புணர்வு இற்றை அரசியல்காரர்களால் உருவாக்கப்பட்டதன்று.

1939-ஆம் ஆண்டு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் மறைமலையடிகள், பெரியார், ஞானியார் சுவாமிகள், கா.சுப்பிரமணியனார், பா. சாமிநாதர், ந.மு. வேங்கடசாமியார், மு. கதிரேசனார், பேராயக் கட்சியிலிருந்த திரு. சோமசுந்தர பாரதியார், திரு. மறை. திருநாவுக்கரசு ஆகிய பெரியோர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் பதவி ஆசை கொண்ட அரசியல்காரர்கள் அல்லர் என்பதையும் இற்றை அரசியலாளர்கள்—தங்களையும் சேர்த்துத்தான்—போலன்றி எங்கள் நலனில் உண்மையான அக்கறை கொண்ட ஆன்றோர் என்பதையும் நாங்கள் நன்றாகவே அறிந்துள்ளோம். எனவேதான் மேற்படி ஆன்றோர் விதைத்த இந்தி எதிர்ப்புணர்வு எனும் வித்து இன்று ஒவ்வொரு தமிழன் உள்ளத்திலும் பல்கிப் பெருகிக் காடாய் நிற்கிறது.

மேலும் 1965-ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது திரு.சி. சுப்பிரமணியம் மற்றும் ஓ.வி. அளகேசன் ஆகியோர் நடுவண் அமைச்சரவையிலிருந்து பதவி விலகித்

தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்தனர். இந்தி எதிர்ப்பு உணர்வு அரசியல் எல்லைகளைக் கடந்தது என்பதற்கு இதைவிடச் சான்று தேவையா?

ஆயினும் தங்கள் கூற்றில் ஓரளவு உண்மை இருக்கவே செய்கிறது. தமிழகத்து இற்றை அரசியலாளர்கள் வழக்கம்போல் இவ்வுணர்வையும் தங்கள் அரசியல் நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்ள விழைகின்றனரே தவிர உண்மை உணர்வோடு இந்தியை எதிர்ப்பதில்லை. எனவே, இவர்களின் செயற்பாடுகள் குறித்துத் தங்களைப் போல எங்களுக்கும் வருத்தமே; வெவ்வேறு வகையில்.

3. மூன்றாவதாக, அரசு என்றுமே எதையுமே மக்கள்மீது திணிக்க விரும்பவில்லையென்றும் ஆனால் ஒருமைப்பாட்டைப் பேணி வளர்க்கவும் தொடர்புக்கான வாய்ப்பை விரிவுபடுத்திக் கொள்ளவும் மக்கள் இந்தி கற்க வேண்டுமென்று அரசு விரும்புவதாகவும் தெரிவித்துள்ளீர்கள். (She said the Government never wanted to impose anything on the people but it desired that they learn Hindi FOR FOSTERING unity and widening the scope of communication).

4. இந்தி எந்த வகையில் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தும் என்று தாங்கள் கருதுகிறீர்கள் என்று எங்களுக்குப் புரியவில்லை. ஒருமைப்பாடு (Unity) என்பது இணைமை (Equality) யிலிருந்து முகிழ்ப்பதாகும். பிரெஞ்சுப் புரட்சிக்குவித்திட்ட முழக்கம், 'உரிமை') இணைமை, உடன்பிறப்புணர்வு. (Liberty, equality, and fraternity) என்பது. அஃதாவது, மக்களுக்குள் ஒற்றுமையுணர்வு, (அனைவரும் நம் உடன்பிறப்புகளே என்ற உணர்வு) வரவேண்டுமானால், அதற்கு முன்பாக அனைவருக்கும் 'தாம் ஒவ்வொருவரும் முழு உரிமை பெற்ற மக்களே' என்ற உணர்வும், 'தமக்குள் ஏற்றத்தாழ்வு ஏதும் இல்லை; அனைவரும் இணையான நிலையில் உள்ளவர்களே' என்ற உணர்வும் ஏற்பட்டாக வேண்டும். (Liberty and equality are the pre-requisites for fraternity) உரிமை'யும், 'இணைமை'யும், 'உடன் பிறப்புணர்வு'ம் எவ்வாறு வரிசைப்படுத்தப்பட்டுள்ளன என்பது ஊன்றிக் கவனிக்கற்பாவது.

5. ஆனால் இந்தி என்றைக்கு ஆட்சிமொழியாக்கப்பட்டதோ அன்றே மற்ற அனைத்து மொழிகளும் இரண்டாம் நிலைக்குத் தள்ளப் பட்டுவிட்டன. 'சட்டத்தின் முன் அனைவரும் இணையே' என்ற அடிப்படைக் கொள்கை இவ்வாறு புறக்கணிக்கப்பட்ட நிலையில், இணைமை (equality) இல்லாது போகும்போது, ஒருமைப்பாடு எவ்வாறு வரும்? அப்படியாயின், ஆங்கிலம் ஆட்சி மொழியாக்கப்பட்டால் மட்டும் அனைத்து மக்களும் இரண்டாந்தர மக்களாக ஆக்கப்

பட மாட்டார்களா என்று தாங்கள் வினவலாம். அந்நிலை நேராது என்பதே உண்மை. இதுபற்றிய விளக்கம் உரிய நேரத்தில் தரப் பெறும்.

எனவே, அரசியற் சட்டத்தைத் திருத்தி ஆங்கிலத்தை மட்டுமே ஆட்சிமொழியாக்க நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். இதுதான் அனைத்து மக்களும் ஒரே அளவிற்கு இறங்கிவந்து ஒரே அளவிற்குச் சுமையைத் தாங்கிக்கொள்ள வகை செய்யக்கூடிய ஒரு விட்டுக் கொடுத்துக் கொள்ளும் ஏற்பாடாகும். இந்திய ஒருமைப்பாட்டைக் காக்க, இந்தி பேசாதோர் மட்டும் அதிகச் சுமை சுமக்க வேண்டும் என்ற தேவை என்ன?

6. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் ஓர் ஐரோப்பிய நாட்டுக்கு ஒப்பாகும் வகையில் பெரியனவாகும். இந்தியாவில் வழங்கும் ஒவ்வொரு மொழியும் ஒரு நாட்டின் ஆட்சிமொழியாகத் தனித்து நின்று செயல்படக்கூடிய அளவு வளமும் வலிவும் பொருந்தியதாகும். எனவே, ஒவ்வொரு மாநிலமும் தனித்தனி நாடாக இருந்திருப்பின், அங்கே இந்திக்கு இடமே இருந்திருக்காது. எடுத்துக்காட்டாக, தமிழகத்தின் பரப்பளவு 1,03, 069 ச.கி.மீ. ஆனால், இலங்கையின் பரப்பளவோ 65,610 ச.கி.மீ. அங்கே, சிங்கள மொழி மட்டுமே முதன்மை பெற்ற ஆட்சி மொழியாக வழங்கிடவில்லையா? தற்போதைய வங்காள தேசத்தில் (1,43,998 ச.கி.மீ.) வங்காள மொழியாக இருக்கவில்லையா? இந்தியாவிற்கு வெள்ளையர் உரிமை வழங்கிய போது, இலங்கையைச் சில சட்ட நுணுக்கக் கரணியங்களாலும் (technical grounds) வங்காள தேசத்தை (அப்போதைய பாக்கித்தான்) சில அரசியற் கரணியங்களாலும் (political grounds) தில்லியின் அதிகாரத்தின் கீழ் கொணரவில்லை. அவ்வாறு கொண்டு வந்திருந்தால், இந்த இரண்டு நாடுகளையும் இந்தியாவின் மற்றும் இரு மாநிலங்களாகக் கருதி, அங்கும் இந்தியைத் திணித்திருப்பீர்கள். அவர்களும் இந்தி கற்றால்தான் ஒருமைப்பாடு வளரும் என்பீர்கள். பரதன் அந்த நாடுகளையும் ஆண்டான், எனவே அவையும் சேர்ந்ததே பாரதம் என்பீர்கள். அங்கும் மும்மொழித் திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்தியிருப்பீர்கள்.

7.ஆக, எங்கள் மேல் இந்தி திணிக்கப்படுவதற்கே வெள்ளையர்தாம் கரணியமோ என்று நாங்கள் எண்ணவேண்டியுள்ளது. ஆம், வெள்ளையர் இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்தையும் தனித்தனி நாடாகவே ஆண்டிருந்தால், தனித்தனியாக அவற்றுக்கு உரிமை வழங்கியிருந்தால், இந்தி அயல் மாநிலங்களில் நுழைய வாய்ப்பே இருந்திருக்காது அல்லவா?

8. வெள்ளையர் தனி நாடாக ஆண்டு வந்த ஒரே கரணியத்தால் 80,00,000 பேர் பேசும் சிங்கள மொழி, எம்மொழிக்கும்

தாழ்ந்து இரண்டாம் நிலையில் நிற்காமல் தனியாட்சி செய்து வருவதைக் காணும் எங்களுக்கு, அதைவிடப் பன்மடங்கு மக்கள் பேசும் எங்கள் தமிழ், தெலுங்கு, மராத்தி முதலான மொழிகளை முழுமையான ஆட்சி மொழிகளாகக் காண 'நயன்மையான ஆவல்' (bonafide desire) இருக்காதா ? இருந்தும் கூட நாங்கள் எங்கள் மொழிகளை ஆட்சி மொழிகளாக்கக் கோரவில்லையே. ஆங்கிலத்தை யன்றோ ஆட்சிமொழியாக்கக் கோருகிறோம். ஏன் ? எப்போது இந்தியா என்ற ஓர் அரசியலமைப்பு ஏற்பட்டுவிட்டதோ, அதன்பின் அதனை மதித்து இந்தியராக வாழவே நாங்கள் விரும்புகிறோம். ஒரு பலதரப்பட்ட மக்கள் வாழும் குமுகாயத்தில் (polyglot society) வாழ்வதில் ஒருவகை இன்பம் உண்டு. தன்னைப் போன்ற மக்களுடன் கலந்து வாழ விரும்புவதே மாந்தனின் இயற்கை. ("Man is a social animal"). தனித்து வாழ அவன் என்றுமே விரும்புவதில்லை. அதுபோலவே, ஓர் இனத்தாரும் மற்ற இனத்தாருடன் சேர்ந்து வாழ விரும்புகின்றனர். ஆனால், அவர்களிடையே இணைமை (equality) நிலவுவது இதற்குக் கட்டாயத் தேவையாகும். (essential). இந்தியாவில் அரசியல், குமுகாய நிலைகளில் அவ்வாறான இணைமைக்கு ஆங்கிலம் ஒன்றே வழி வகுக்கும். தாங்களும் தங்களைப் போன்ற பிற இந்தி பேசும் மக்களும் இதனை உணர்ந்தாக வேண்டும். இந்தி பேசா மக்களின் உள்ளக் கிடக்கையை/உணர்வலைகளை, உள்ளத்தின் ஏக்கத்தைப் பரிவுணர்வோடு அணுகிப் பாருங்கள். எடுத்துக் காட்டாக, பாக்கிசுத்தானிலிருந்து துணிக்கப்பட்ட கரணியத்தால் கிழக்கு வங்கத்தில் வங்கமொழி தனியாட்சி செய்து வருவதைக் காணுகின்ற ஒரு மேற்கு வங்கத்தைச் சேர்ந்த வங்காளி, தான் மட்டும் இந்தியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டியுள்ள தனது நிலை பற்றி என்ன எண்ணுவான் ? இது குறித்துத் தாங்கள் என்றைக்காவது சிந்தித்ததுண்டா ?

9. இந்திய ஒற்றுமையைக் கருத்திற்கொண்டு, இந்தியர் என்ற உணர்வோடு வாழ விரும்பும், இந்தி பேசா மக்களாகிய எங்களது நயன்மையான உணர்வுகளைப் புரிந்து கொள்ள விரும்பாமல் புறக்கணித்துவிட்டு, ஒருமைப்பாட்டைப் பற்றித் தாங்கள் பேசுவது, 'இந்திய ஒருமைப்பாடு பற்றித் தாங்கள் உண்மையான அக்கறை கொண்டிருக்கவில்லையோ' என்ற ஐயத்தை எங்கள் உள்ளத்தில் உருவாக்குகிறது.

எனவே, அருள் செய்து 'இந்தியின் ஆளுமை' (Hindi's sovereignty) யையும், 'இந்திய ஒருமைப்பாட்டையும்' (Indian unity) ஒன்றாகவே எண்ணாதீர்கள். இவை இரண்டும் எதிரெதிர் திசைகளில் நகர்பவை. முன்னது வலிவுறின் பின்னது நலிவுறும்; பின்னது வலிவுற முன்னது நீங்க வேண்டும்.

10. அதுமட்டுமன்று. எந்தவொரு நாட்டின் ஒருமைப்பாட்டிற்கும் (1) ஒரே பகுதியில் மட்டுமல்லாது பரவலாக்கப்பட்ட

Scanned with CamScanner

வியாழக் கோளில் இடி மின்னல்கள்!

வியாழக் கோளில் இடி, மின்னல்கள் நிகழ்ந்து கொண்டே யிருப்பதாக உக்ரேனிய அறிவியல் பேரவையின் வானொலி-பூதவியல், மற்றும் மின்னியல் பிரிவு அறிவியலார் கண்டுபிடித்துள்ளனர்.

கார்க்கோவ் அருகே அமைக்கப்பட்டுள்ள, உலகத்தின் மிகப் பெரிய வானொலி தொலைநோக்கியின் உதவியுடன் அவர்கள் வியாழக் கோளின் புதிர்களில் ஒன்றை விளக்கி விட்டனர். வானத்தில் வானொலிச் சிற்றலைகளை வெளியிடும் மிக ஆற்றல் வாய்ந்த முதல் இடமாக வியாழக் கோளம் விளங்குகிறது. இந்த அலைகள் விட்டு விட்டுத் தோன்றுவதற்குக் காரணம், இந்தக் கோளம் மற்றும் இதன் துணைக் கோளமாகிய 'இயோ' ஆகியவற்றின் சுழற்சியேயாகும். வியாழக்கோளில் குறுகிய, மற்றும் நீண்ட இடி மின்னல்கள் தோன்றுவதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து உள்ளனர். வானொலி அலை வெளிப்பாட்டைத் தூண்டுபவை இவையே என்று கருதப்படுகிறது.

இந்த இடி மின்னல்கள், இந்நிலத்தில் தோன்றும் இடி மின்னல்களிலிருந்து பெரிதும் மாறுபட்டவை என்று அறிவியலார்கள் கூறுகின்றனர். இந்த இடி—மின்னல்கள் தோன்றுவதற்குக் காரணமாக உள்ள மேகங்களில் நீர்த் திவலைகள் மட்டுமின்றி ஈலியம் மற்றும் நீர்வளி (Hydrogen) ஆகியவற்றின் கலவையும் உள்ளன. இவற்றில் அடிக்கும் மின்னல் வீச்சுகளின் அளவை, நில மின்னல்களோடு ஒப்பிட முடியாது; அவற்றின் வீச்சு, நிலத்தின் அரைவிட்ட அளவைவிட அதிகமாகும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

பொருளியல் முன்னேற்றம், (2) குமுகாய, பண்பாட்டு நிலைகளில் இணைமை, (3) அதிகாரம் குவிக்கப்படாமல் பரவலாக்கப்பட்ட அரசியலமைப்பு ஆகியவை மெய்ப்பாடாக்கப்பட வேண்டியனவும் பெரிதும் தேவையாகும்.

ஏனெனில் இவற்றில் ஏற்றத் தாழ்வு கரணியமாகக்கூட நாடுகள் பிளவுபட்டதுண்டு. ஆகவே, மொழி நிலையில் இணைமை என்பது இந்திய ஒருமைப்பாடு எனும் சுவருக்கு அடிக்கல் என்றால், பொருளியல் குமுகாயம், பண்பாடு, அரசியல் ஆகிய நிலைகளில் இணைமை என்பது, அச்சுவர் நேராய், நிலையாய், வலிவாய் நிற்க உதவும் சாந்து (plaster) ஆகும். சுருங்கக்கூறின், இந்தியோ அல்லது அரசியற் சட்டத்தின் எட்டாம் அட்டவணையில் இடம் பெற்றுள்ள வேறு எந்த மொழியுமோ இந்திய ஒருமைப்பாட்டை உருவாக்கப் பொருத்தமானதன்று. மேலும், மொழிச் சிக்கல் ஒன்று மட்டுமே இந்திய ஒருமைப்பாட்டுக்குத் தடைக்கல் என்பதுமில்லை.

11. சிந்தித்து நயன்மையுணர்வுடன் செயல்படுதல் தேவை.

தங்களன்புள்ள, **இராச. கார்த்திகேயன்.**

எரிகிறதே, குலை எரிகிறதே!

உன்னிடம் உரைத்துவிட்டேன் — பிறர்
நம்மினம் பிரித்ததையே — தமிழ்
மண்ணினைப் பறித்ததையே — நான் (உன்னிடம்)

அரியிடம் வரியிடம் பயிற்றுவித் தாலும்
அருந்தமிழ் நிலமீட்கும் — அடா
அருந்தமிழ் நில மீட்கும்!
கரியிடம் பரியிடம் கற்பித் தாலும்
கால்வைத் ததைக் கேட்கும்-பிறர்
கால்வைத் ததைக் கேட்கும்!

நரியனை யார்நம் வினைவெலாந் துய்த்து
நடுத்தெரு வோட்டுகின்றார் — நமை
நடுத்தெரு வோட்டுகின்றார்.
எரிகிற தே,குலை எரிகிற தே,ஆ
இன்னமும் உறங்குதியே! — அடா
இன்னமும் உறங்குதியே!

பாவால் பாவல ரேறுபா வேந்தர்
பாட்டெழு திக்குவித்தும் — பல
பாட்டெழு திக்குவித்தும்
நாவால் பெரியா ரண்ணு எலாரும்
நாட்டில் முழக்கமிட்டும் — நம்
நாட்டில் முழக்கமிட்டும்

பாவா ணர்மொழிப் பகையினை வென்று
பழந்தமிழ் காத்தபின்பும் — நம்
பழந்தமிழ் காத்தபின்பும்
தாவா வெம்மறம் எங்கு வைத்தாய்?
தமிழா விழித்தெழுவாய் — மறத்
தமிழா விழித் தெழுவாய்.

குலங்குல மாகப் பலபிரி வாகிக்
குலைக்கப் பட்டனையே! — அடா
குலைக்கப் பட்டனையே
கலங்கல மாகக் கடல்கடந் தாண்டவன்
கலைக்கப் பட்டனையே! — அடா
கலைக்கப் பட்டனையே!

நலங்கெடப் பகைஞர் நாய்போ லாக்கினர்
நக்குதற் கோபிறந்தாய் — நீ
நக்குதற் கோபிறந்தாய்?
வலங்கை வாளெடு! இடங்கை வேலெடு!
வந்தவை பறந்திடுமே — நிலம்
தந்(து)அவை பறந்திடு மே!

— **மெய் அருண்மொழியன்**, தலைவர். உ.த.மு.க. முகவை வட்டம்.

என் தமிழர் அறியாமை!

— தமிழவேள்

தன்னலத்தால் ஒருகூட்டம் தான்வாழ வேண்டித்
தாழ்வென்றும் உயர்வென்றும் தந்திரமாய்க் கூறிப்
பன்னூறு சாதிகளைப் படைத்துவிட, அந்தப்
பாழ்சேற்றைச் சந்தனமாய் மார்பகத்தே பூசி,
ஒன்றேதான் மக்களினம்; பிறப்பெல்லாம் ஒக்கும்
உண்மையினை இன்றளவும் உணராமல் வாழும்
என்தமிழர் அறியாமை என்னென்று சொல்வேன்!
இழிந்ததனை நறுமணமாய் ஏற்று மகிழ் கின்றார்!

வடமொழியே தேவமொழி என்றொருபொய் கூறி
வாழுமொழி தமிழினும்அஃ(து) உயர்ந்ததுவாம் என்று
சடங்குகளைப் புரியாத அம்மொழியால் செய்தே
சிறுகூட்டம் இந்நாட்டில் செம்மாந்து வாழ
இடம்கொடுத்துக் கொண்(டு)அந்த ஏய்ப்போரைப் பேணும்
என்தமிழர் அறியாமை என்னென்று சொல்வேன்!
விடமுடியா விருப்பமுடன் ஒன்றுக்கும் உதவா
விழலுக்கே நீர்பாய்ச்சி ஓய்ந்துகிடக் கின்றார்!

கழிகாமம் கொண்டோராய் ஆண்பெண்கள் கூடிக்
கட்டிடணைத்(து) ஆடிமுத்தம் இடுகின்ற கூத்தை;
பழிக்கஞ்சாப் படுகொலையை, அடிதடியைப் பெண்கள்
பாதியுடை களைந்துவிட்டுக் காட்டுகின்ற மெய்யை,
எழில்திரையில் பார்த்திடவே எப்போதும் செல்லும்
என்தமிழர் அறியாமை என்னென்று சொல்வேன்!
கழிநீரைப் பாலென்று குடித்துமகிழ் கின்றார்!
கடுநஞ்சை அமுதெனவே கண்டுகளிக் கின்றார்!

உருவத்தால் செம்மையராய் உள்ளத்தால் மாறாய்
உலவிவரும் சமயமடத் தலைவர்பின் சென்றும்,
பொருள்குவிக்கும் ஒருதொழிலாய் அரசியலை ஓட்டும்
பொய்ப்புனைவுப் பலகட்சித் தலைவர்பின் போயும்,
இருள்நாடும் பூனையினைப் புலியாகப் போற்றும்
என்தமிழர் அறியாமை என்னென்று சொல்வேன்!
அருவருப்பை அழகென்றே அணைத்துக்கொள் கின்றார்!
அணியரையே மிகஉயர்த்திக் காலில்வீழ் கின்றார்!

Scanned with CamScanner

0 : 977 : அன்புள்ள ஐயா அவர்களுக்கு, நான் மலையகத்தில் இருந்து இரண்டு மாதச் சுற்றுச் செலவிற்காகத் தமிழகம் வந்துள்ளேன். தற்பொழுதுதான் இலக்கிய உலகிற்குள் அடியெடுத்து வைத்துள்ளேன். இரண்டு நாட்களுக்கு முன் தங்களின் படைப்பான **தென்மொழி, தமிழ்ச்சிட்டு** எனுமிரு சுவடிகளைப் படிக்கும் வாய்ப்பைப் பெற்றேன். இதுநாள்வரை இதுபோன்றதொரு தேனினுமினிய தமிழ்ச் சுவடிகளை அடியேன் நுகர்ந்தும் பார்த்தறியேன். எனக்குள் தங்களது தீந்தமிழ்ப் படைப்புகளைப் படித்துச் சுவைக்கத் தீரா ஆவல் மூண்டுள்ளது. எனவே அருள் கூர்ந்து மூதன் முதல் தங்களது **தென்மொழி, தமிழ்ச்சிட்டு** தொடங்கியதிலிருந்து இன்று வரையிலான சுவடிகள் தங்கள் கையிருப்பில் இருக்குமானால் அதற்குரிய தொகைகளை அனுப்பி அடியேன் அந்நூல்களைப் பெற்றுக் கொள்கின்றேன்.

மேலும் தொடர்ந்தும் அவ்விரு சுவடிகளையும் நான் மலையகத்திலிருந்தே பெற விருப்பம் கொண்டுள்ளேன். அதற்குரிய தொகை எவ்வளவு என்பதனைத் தெரிவித்தால் உடனே தொகையை அனுப்புகிறேன். மேலும் ஒரு சிறிய ஆவல்! தங்களது திருவுருவப் புகைபடம் ஒன்றை அருள் கனிந்து எனக்கு அனுப்பி வைத்து வாழ்த்து வழங்குப்படி தாள் பணிந்து கேட்டுக் கொள்கிறேன். தங்களைப் போன்ற பேரறிஞர்கள் புகைப்படங்களைக் கண்டாலே எங்களைப் போன்றவர்களுக்கு இலக்கியம் தானே வளரத்தொடங்கி விடும் இல்லையா? ஆகவே இச்சிறிய, தங்கள் மாணக்கனை வாழ்த்தத் தங்களது விடையையும், புகைப்படத்தையும் அனுப்பி வைத்தருளும் படியாக மீண்டும் தாள் பணிந்து கேட்டு விடை பெறுகின்றேன்.
'நன்றி' வணக்கம். தங்களன்பு மறவாத மாணக்கன் — **கோவதன்,**
பரமக்குடி

0. 978 : பேரன்புமிகு பாவலரேறு ஐயா அவர்களுக்கு, தாங்கள் என்றும், நம்பிக்கை மிகுந்தவர்கள்கூடத் தன்னலம் மிகுந்தவர்களாக இருக்கக்கூடும். தங்களை விட்டு ....ன், ... சு, ...பா ஆகியோர் பிரிந்தது எனக்கு நன்கு தெரியும். அப்பொழுது '**ஒரு சிலரையே நம்புங்கள், தனியாகவே நடவுங்கள்**' என்று இங்கு வந்தபோது எழுதிக் கொடுத்தீர்கள். எனக்கு நினைவிருக்கிறது.

எனக்குத் தமிழின் மீதும் தமிழியக்கத்திலும் 1964 ஆம் ஆண்டிலிருந்தே தொடர்பு உண்டு. பெரிய தொண்டு ஒன்றும் செய்யாவிடினும் திருக்குறள் கழகம் நடத்துதல், குறிப்பு எடுத்தல், தமிழின்பால் மெய்யன்பு கொண்டோரிடம் அன்பாக இருந்து வருதல் முதலியவை செய்து வருகிறேன். எனக்குத் தெரிந்தவரையில் தூய்மையாகவே பேசவும் எழுதவும் முயன்றும் செயற்பட்டும் வருகிறேன். வறுமையில் செம்மையாக வாழ்ந்து விட்டேன். 1970-ஆம் ஆண்டு என் தந்தை இறந்து விட்டார். அதன் பின்னர் அல்லல்கள் பல அடைந்தும் தூய்மையாகத் தமிழியக்கத்தினின்று விடுவித்துக் கொள்ளாமல் தொடர்புடனே வாழ்ந்து வருகிறேன்.

தாங்கள் (1971-இல் என்று நினைக்கிறேன்) புதுக்கோட்டைக்கு முதலில் வரும் பொழுது இரவு முழுதும் விழித்துத் தட்டிகள் எழுதினேன். காலையில் மூலையில் தான் இருந்தேன். இரவில் நன்கு உறங்கியோர் பகலில் விழித்து மேடையில் முழங்கினர். தமிழின் அடிக்கல்லாகக் காட்டிக் கொண்டனர். வரவைமட்டுமே ஏற்றுப்

Scanned with CamScanner

பழக்கப்பட்ட அன்பர்-தற்பொழுதும் வரவேற்றுப் பேசினர். நான் தூய உளத்துடன் அன்றும் இருந்தேன். இன்றும் இருக்கிறேன். என்றும் இருப்பேன். நான் பெரிய தொண்டு ஒன்றும் செய்யா விடினும் எனக்கு மறுவேளை உணவுக்கு வழியில்லாதபோது எதையும் எதிர்பார்க்காது செய்வது அப்பொழுது பெரிய செயலல்லவா? உங்களை ஒப்பிட்டுப் பார்த்தால் தூசு தான் நான். எனக்கு வீட்டில் கடுமையான எதிர்ப்பு-உணவு இல்லாதபோது உனக்கு இஃது என்ன வேலை என்பது தான்.

கம்பன் கழகத்தில் ஈடுபாடு உள்ளவர், நீங்கள் வந்தபோது பெரிய எழுத்தராக-தமிழ்த் தொண்டராகக் காட்டிக் கொள்கிறார். உங்கள்-நம் தென்மொழிக் கொள்கைகள் பிடிக்காதவர்கள் பாவரங்கம் நடத்துகிறார்கள். அவர்கள உங்களைப்பற்றி எழுதிய பாடலை உண்மையென எண்ணித் தென்மொழி'யில் வெளியிட்டிருக்கிறீர்கள். அவர்களும் தமிழர்தாமே! என் செய்வது? என் மூச்சும் குருதியும் உள்ளவரை தமிழுக்கு உழைப்பேன்.

உ.த.மு.க. தொடக்க விழாவிற்குச் சிலம்பு விளையாட்டு, எக்காளம், பறை, கொட்டு ஆகியவற்றை ஏற்பாடு செய்ய எனக்குப் பொறுப்புக் கொடுக்கப்பட்டது. காரணம் நான் அந்தப் பகுதியில் வாழ்கிறேன். எக்காளம் ஊதுபவனுக்கு எக்காலத்தில் தான் விடிவு? ஊர்க்கட்டுப்பாட்டை மீறி 20 கல் தொலைவிலிருந்து வந்து எக்காளம் ஊதினார்கள். என்னுடன் பிறக்காவிடினும் அவர்கள் என் உடன் பிறப்புகள்.

எந்த ஒரு கழகத்தில் மத, இனவேறுபாடு அற்ற குமுகாயத்தை எதிர்பார்க்கிறோமோ அதன் வேரே அசைந்து ஆடுவது போல இருக்கிறது. நான் மனு நூலில் குறிப்பிட்ட-தாங்கள் ஆசிரியவுரையில் எழுதிய நாலாந்தர மக்களில் ஒருவன். நான் கருதவில்லை. குமுகாயம் எண்ணுகிறது. எனக்குத் தமிழ்த் தொண்டோ உ.த.மு.க கொள்கைகளோ மூகாமை என்றாலும் எல்லோருடைய எண்ணத்திலும் அடிமை போல இருக்க முடியுமா? தங்களுடைய உழைப்பு, எழுத்துகள், உயிர்மூச்சு இவை ஏதேனும் கீழ்நிலையிலுள்ளோருக்கு எங்ஙனம் கிடைக்கும்? புதுக்கோட்டையைப் பொறுத்தவரையிலும் நல்ல பாக்கள் இயற்றும் திறன் படைத்தவர்கள் என்னுடைய உடன்பிறப்புகள் தாம்-நாலாந்தர மக்கள். அவர்கள் அறிவை எத்தனைப் பேர் ஏற்பர்? மறைமுகமாகச் சுரண்டல்கள். இந்த நிலையில் நம் அன்பர்களிடமே இந்த எண்ணங்கள். எப்படி மற்றவர்களிடம் எதிர்பார்க்கிறீர்கள்? பழங்காலத்தைப் போல உள்ள இந்த நிலையை மாற்ற நாமே முயலாது ஆரவாரமாக, விளம்பரமாக இருக்க வேண்டுமென எண்ணுகிறோம். எங்ஙனம் மற்றவர்களை மாற்றமுடியும்?

இதனால்தான் தாங்கள் இங்குவந்து உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தபோது நான் விடுப்பு எடுக்காமல் பணியாற்றச் சென்றேன். குறிப்பாக எனக்கு எந்தப் பொறுப்பும் வேண்டாம் என்பதே என் விருப்பம். பதவியில்லாமல் தொண்டாற்றுவதே சிறந்ததெனக் கருதுகிறேன்.

'தென்மொழி', 'தமிழ்ச்சிட்டு' ஆகிய இதழ்களை நிறுத்த வேண்டாம், அவை வேருன்றும் நேரம். நம்மக்கள் தற்பொழுது தான் விழித்து எழுகிறார்கள். அன்பன் —எயினன், கோட்டை.

தென்மொழி மின் அச்சகம், சென்னை-600005. (தமிழகம்).